www.tamilarangam.net

எண் 2 இல 6 1.3.84




# வியட்னாம், ஈரான் புரட்சிக் கோலம் லெபனான் நாட்டின் எழுச்சி வேகம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆசிரியர் கருத்து.

விவாசமெடுத்த தமிழீழ விடுதலை இயக்கங்கள் வெகுஜன ஆதரவு இல்லாமையால் மீண்டும் வங்கிக் கொள்ளைகள் மூலம் இயக்கங்களை உதிர்ந்து விடாது காப்பாற்றும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டன. 1983 ஜூலை, ஆகஸ்ட் கலவர நாட்களையடுத்து தம்மைக் காலங்காலமாக யு.என்.பி க் காரர்களென்று சொல்வதில் பெருமை கண்டவர்கள் கூட தமிழீழ விடுதலை இயக்கங்களுக்கு பொருளுதவி தொடக்கம் மற்றைய நானாவித தத்துவ ஆத்மீக உதவிகளை அளிக்க முன் வந்ததோடல்லாமல் உடனே ஒத்திப் போடாது உதவியையும் செய்தார்கள். அன்று ஊற்றெடுத்த ஆதரவைத் தொடர்ந்து சொரியச் செய்வதற்கு ஆதரவாளர்களிடத்திலும், அனுதாபிகளிடத்திலும் தொடர்ந்தும் வரிசைக் கிரமமாகவும் அரசியல் வேலை செய்வதற்கு வல்லமையற்றவர்கள். தமிழ் மக்கள் தங்களை நம்பிக் காத்திருந்து பூண்டோடழிய வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். யூலை இனக்கலவர நாட்களையடுத்து அடுத்தடுத்தமாதங்களில் தென்னிலங்கையிலுள்ள அகதிகள் வந்தபின்பு ஒட்டுமொத்தத் தமிழீழத்திற்கான போராட்டத்தை ஆரம்பிப்போம் என்று வீறுப்புப் பேசிய தானைத் தலைவர்கள் இன்று மீண்டும் பரபரப்புச் சம்பவங்களால் தமிழ் மக்களை ஏராட்டப் பார்க்கிறார்கள். இன்று பெய்றூட்டிலே வலிட்யும்லட்டும், நபிபேரியும் மக்களை ஆயுதபாணியாக்கி ரோட்டுக்கு இறக்கி அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் எங்கும் நிறைந்தமையையும் எல்லாம் வல்லமையையும் மானபங்கப்படுத்தி றேகனுக்குத் தேர்தற் பரிசு கொடுத்திருக்கிறார்கள். அவர்களது வெற்றியின் இரகசியம் அவர்களுக்குப் "பொது எதிரி" யாரென்று தெரிந்தது. எங்கே பொது முயற்சி செய்ய வேண்டுமென்று தெரிந்தது. தமிழீழ விடுதலையின் தானைத் தளபதிகளின் பத்து வருடத்திற்கு மேலான ஆயுதப்போராட்டத் தயாரிப்புகள்— அதாவது அவர்களது மூலோபாய தந்திரோபாயங்கள்— இன்று வரை ஒன்றாவது பிழையென்று அவர்களால் ஒத்துக்கொள்ளாத பரிபூரணத்துவம் நிறைந்த அந்தத்தயாரிப்புகள் களத்திலே பரீட்சைக்குள்ளாகும் போது தமிழ் மக்கள் கண்டு கொள்ளத்தான் போகின்றார்கள்.

புரட்சியென்பது வெறுங்கையால் முழம் போடுவதல்ல. வெகுஜனங்களிடம் நாளுக்குநாள் கிழமைக்குக் கிழமை சென்று அரசியல் கிளர்ச்சிகளைச் செய்யாது; இயக்கங்கள் நாளாந்தம் செய்ததையும் சொல்லி நாளாந்தம் செய்யப் போவதையும் சொல்லி, அச்செயற்பாடுகளின் போது தாம் எதிர்பார்க்கும் பின் விளைவுகள் பக்கவிளைகள் என்னவென்பதையும் சொல்லி, அவர்களின் பிரதி நடவடிக்கைகளையும் மதிப்



பீடுசெய்தல்லவா செயற்பட வேண்டும்.

ஆண்டையில் ஒரு நாள் ஆவணியில் ஒரு நாள், அவர்கள் செய்யும் பரபரப்பூட்டும் சம்பவங்களுக்கு இடைக்காலங்களில் தமிழ் மக்களை இந்தச் சமுதாய அமைப்பு வகுத்து விட்ட வழிகளில் அமிழ்த்தி மீளா அரசியற்துயிலில் ஆழ்த்திவிட்டு இடையிடையே திடுக்கிட்டெழுந்து தங்களது வீரப்பிரதாபங்கள் பட்டியலை ஏலோலம்பாவாய் பாடினால் புரட்சிகர ஞானம் பிறந்துவிடாது. தொடக்ககாலங்களிலேயே சட்டவிரோத நடவடிக்கைகளில் தொடங்கிவிட்டோம் ஆதலால் கிரமமாக மக்களிடம் போக முடியவில்லை என்று எதற்கும் எப்படியாவது காரணம் கூற முயற்சிப்பார்கள். எங்களின் பக்கம் புரட்சிவரப்போவதில்லை. புரட்சியின் பக்கம் தான் நாம் போகவேண்டும். பரந்துபட்ட தமிழ் மக்களை ஒழுங்கமைவுக்குக் கொண்டுவரவேண்டுமானால் தன்னொழுங்குக்கு வந்த, ஒழுங்காகவும் வரிசைக் கிரமமாகவும் செயற்படும் விடுதலை இயக்கங்களாலேயே முடியும். தமக்குள்ளேயே அரசியல்ரீதியினை ஒழுங்கமைவுக்குக் கொண்டு வராதவர்கள், எவ்வாறு பரந்துபட்ட மக்களை ஒழுங்கமைவுக்குக் கொண்டுவர முடியும். 1923ல் ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சியின் புரட்சிகர எத்தனங்கள் தோற்றதற்கான காரணங்கள் அவர்களிடம் ஒரு வரிசைக்கிரமமான தயாரிப்பின்மையே ஆகும். இன்றைய இக்கட்டான அரசியற் காலகட்டத்தில் மற்றொரு பெய்றூட்டைக் கொண்டுவரவேண்டுமானால் வரிசைக்கிரமாக அரசியற் கிளர்ச்சி செய்யும் இயக்கமாக உருமாற்றும் பிரயத்தனத்தாலேயே முடியும். தமிழீழ விடுதலைக்காக அடித்தளத்திலிருந்து சொரிந்து கொண்டிருக்கும் ஆதரவை உறிஞ்சும் சக்தியற்றவர்கள் வங்கிக்கொள்ளைகளை நடாத்தி விட்டு ஒடுக்குகின்ற அரசாங்கத்தின் சொத்தைத் தானே கொள்ளையடித்தோமென்று தமிழ் மக்களுக்குக் காரணம் காட்டித் தப்பிக் கொண்டு போகலாம். தமிழீழவிடுதலைக்குத் தமிழ் மக்களின் நிதியுதவி தொடர்ந்து வேண்டும். அந்த நிதியுதவி வழங்கும் மக்களும் விடுதலை இயக்கத்திற்கு வேண்டும். அவர்கள் அபிப்பிராயங்களும் தமிழீழவிடுதலை இயக்கத்திற்குத் இன்றியமையாததாகும்.


எங்கள் நினைவு நூலகம்

27, ORPHEUS TOWER
6. DESMOND STREET
LONDON SE14 6HY



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






NABIH BERRI



A Shi'ite woman cradles an AK-47 rifle



JUMBLATT



# புரட்சியில் லெபனான்

"WE MUST FACE UP TO THE STARK REALITY-
WORLD WAR 111 HAS BEGUN, AND WE ARE LOSING IT"
-Richard Nixon("THE REAL WAR")

மூன்றாவது உலக யுத்தமானது ஏற்கனவே தொடங்கிவிட்டது. அதில் நாம் வலுவிழந்து கொண்டு போகின்றோம் என அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி RICHARD-NIXON, தான் எழுதிய "THE REAL WAR" என்ற புத்தகத்தில் எழுதியுள்ளதன் அர்த்தம் அதன் சகல பரிமாணங்களிலும் இன்று லெபனானில் வெளிப்பட்டுக்கொண்டிருக்கிறது. "சாண் ஏற முழம் சறுக்கிய" கதையாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஒவ்வொரு நடவடிக்கைகளும் பிரதி விளைவுகளை ஏற்படுத்தி வருவதையே லெபனானின் அரசியல் நெருக்கடிகள் படம் பிடித்துக் காட்டிக்கொண்டிருக்கின்றன.

கொரியாவிலும், வியட்நாமிலும்; றொடீசியாவிலும், அங்கோலாவிலும், நிக்கராகுவாவிலும், ஈரானிலும் ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைக்கெதிராக வெற்றி கொண்ட போராட்டங்கள் மத்தியிலும், எல்சல்வடோரிலும், சிலியிலும்; நமீபியாவிலும், சூடானிலும்; மொரோக்கோவிலும், எகிப்திலும்; பாகிஸ்தானிலும், இலங்கையிலும், இன்று அசுர வேகத்தில் புறப்பட்டு வரும் ஏகாதிபத்திய எதிர்ப்பு அலைகளின் மத்தியிலும் தான் உலக ஏகாதிபத்தியமானது லெபனானின் மீதான தனது ராணுவ, அரசியல் ஆளுமையை கட்டிக்காக்க எடுத்து வரும் பகீரதப் பிரயத்தனங்கள் பயனற்றுப் போய்க்கொண்டிருக்கின்றன.

மத்திய கிழக்கையும், ஆபிரிக்காவையும் நேரடி ராணுவ அடக்குமுறைக்குட்படுத்திச் சுரண்டி வரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அதி சக்தி வாய்ந்த ஆறாவது கடற்படையானது MEDITERRANEAN கடலினுள் தொடர்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ந்தும் இருப்பதற்கு விமான தளமாகச் செயற்பட்ட பெய்ரூட் சர்வதேச விமான நிலையமானது இன்று லெபனானிய புரட்சிப் படைகளான NABIH BERRI தலைமையிலான AMAL (நம்பிக்கை) படைகளிடமும், WALID-JUMBLATT தலைமையிலான முற்போக்கு சோஷலிசக் கட்சியிடமும் வீழ்ச்சியடைந்து விட்டது.

லெபனானிய மக்களை பிரித்தாளுவதற்காக அவர்களை கிறிஸ்தவர்கள் என்றும், முஸ்லீம்கள் என்றும் பிரித்து வைத்ததன் மூலம் தமக்குச் சாதகமான ஆட்சி நிலைமைகளை உருவாக்கிய ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சிகள் பாரிய மட்டத்தில் ஏகாதிபத்தியத்திற்கே பிரதிவிளைவுகளை ஏற்படுத்தி விட்டது. ஜனாதிபதியாக கிறிஸ்தவரும், பிரதம மந்திரியாக SUNNI MOSLEM உம் சபாநாயகராக SHIITE-MOSLEM உம் இருக்க வேண்டும் என்ற மதவாதத்தின் அடித்தளத்தில் வைத்து இயற்றப்பட்ட பாரம்பரியச் சட்டமே இன்று ஏகாதிபத்தியத்திற்கு யமனாகி விட்டது. பிரதம மந்திரியாக கடமையாற்றிய SHAFIQ-AL-WAZZAN உம் அவரது மந்திரி சபையும் பெப்ரவரி மாதம் 5ம் திகதி "AMAL" விடுதலை இயக்கத் தலைவரான NABIH BERRI யின் வேண்டுகோளுக்கு இணங்க ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து ஏற்கனவே அரசியல் மயமாக்கப்பட்ட செயற்பாடுகள் புரட்சிக் கோலம் பூண்டன. 1980 OCTOBER 26ம் திகதி தொடக்கம் பிரதம மந்திரியாக செயற்பட்டு வந்த SUNNI-MOSLEM இனத்தவரான SHAFIQ-AL-WAZZAN தலைமையிலான மந்திரி சபையின் ராஜினாமா லெபனானிய ஆயுதப்படைகளின் மனோபலத்தை தவிடு பொடியாக்கியது. NABIH-BERRI, WALID-JUMBLATT இன் வேண்டுகோளுக்கேற்ப ஆயுதப்படைகளின் கணிசமான முஸ்லீம்கள் ஆயுதங்களுடன் சாரிசாரியாக AMAL விடுதலைப் போராளிகளுடனும், முற்போக்கு சோசலிசக் கட்சியின் விடுதலைப் போராளிகளுடனும் சேர்ந்து கொண்டனர். ஏகாதிபத்தியத்தினால் செயற்கையாக SEPT 23, 1982 இல் ஏற்படுத்தப்பட்ட AMIN-



GAMAYAL ராஜினாமா செய்ய வேண்டும் என NABIH-BERRI அறிக்கை விட்டார். அது வரை தாக்குதல் ஓயாது என WALID-JUMBLATT அறிக்கை விட்டதுடன் இஸ்ரேலுடன், AMIN-GAMAYAL செய்து கொண்ட MAY 17ம் திகதி ஒப்பந்தத்தை ரத்துச் செய்யவும் கிறிஸ்தவ, முஸ்லீம், DRUZE இனங்களுக்கான சமத்துவமான ஆட்சியை கொண்டு வருவதற்கான சமாதானம் தவிர்ந்த இடைக்காலச் சமாதானம் எதையும் தாம் ஏற்பதற்கில்லையெனவும் அறிக்கை விட்டார்.

இதைத் தொடர்ந்து மனோவியலில் ஆட்டம் கண்டு விட்ட 37,000 அரச ஆயுதப்படைகளுக்கெதிரான போராட்டங்கள் வெற்றிக்கு மேல் வெற்றியைத் தழுவின. மேற்கு பெய்ரூட் புரட்சியாளர்கள் கையிலே விழவே சர்வதேச சமாதானப்படைகள் என்ற பசுத்தோல் போர்த்த ஏகாதிபத்தியப்படைகள் லெபனானை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டன. ஏற்கனவே 259 பேரினை ஒரேயடியாக அக்டோபர் 23ம் திகதி அன்று பலிகொடுத்த அமெரிக்க அரசாங்கத்தின் காங்கிரஸ் அல்லோலகல்லோலப்பட்டது. அமெரிக்க ஜனாதிபதி றேகனுக்கும், சபாநாயகர் O'NEILL இற்குமிடையில் வாக்குவாதம் முற்றியது. அமெரிக்க படைகளை உடனடியாக லெபனானை விட்டு வெளியேற்ற வேண்டும் என்ற O'NEILL இன் வாதம் றேகனுக்கு எரிச்சலை உண்டாக்கியது. இதைத் தொடர்ந்து NEW·YORK-TIMES இற்கு பேட்டி கொடுத்த றேகன் "O'NEILL IS READY TO SURRENDER, BUT I AM NOT" என்று தனது எரிச்சலை வெளிக்காட்டினார். இதைத் தொடர்ந்து அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆட்சித்தலைவர்கள் அவசரமாக கூடி ஆலோசித்தார்கள். [லெபனானில் NABIH-BERRI யும் WALID-JUMBLATT உம், ஏகாதிபத்திய படைகளும், இஸ்ரேலிய படைகளும், லெபனானை விட்டு வெளியேற வேண்டும். இது ஒரு உள்நாட்டு யுத்தம் என அறிக்கை விட்டுக்கொண்டிருந்தார்கள்] றேகன் நிர்வாகம் ஈற்றில் பெய்ரூட் சர்வதேச விமான நிலையத்திற்கருகாமை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யில் அமைந்திருந்த தமது இராணுவ தளத்தை மாற்றுவதெனவும், ராணுவ வீரர்களை கப்பலுக்கு எடுத்துச் செல்வதெனவும் தீர்மானித்தது. அதே நேரத்தில் AMIN-GAMAYAL இன் ஆட்சியைப் பாதுகாக்க கடல் மூலமாகவும், விமான மூலமாகவும் தேவைப்படின் அரச எதிர்ப்பு படைகள் மீது தாக்குதல் நடாத்துவதாகவும், PENTAGONஇல் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட 35M-60 ரக டாங்கிகளையும் விட மேலதிக ராணுவ உதவிகளை AMIN-GAMAYALஇன் ஆட்சிக்கு வழங்குவதாகவும் மாற்றுத்திட்டம் வகுத்தது.

மேற்கு பெய்ரூட்டில் அமீன் கமாயலின் படைகள் புறமுதுகு காட்டவே பிரித்தானியா தமது படைகளை அவசரம் அவசரமாக லெபனானை விட்டு வெளியேற்றியது. இதைத் தொடர்ந்து இத்தாலியப்படைகளும், பிரிகேடியர்-ஜெனரல் JAMES ROY தலைமையிலான அமெரிக்க படைகளும் பகுதி பகுதியாக வெளியேற்றப்பட்டன. அமெரிக்க துருப்புகளில் சிலமட்டும் அமெரிக்க தூதரகத்தைப் பாதுகாக்கவும் அமெரிக்க கம்பனிகளின் சொத்துக்களைப் பாதுகாக்கவும் மேலும் சில காலம் பெய்ரூட்டில் தங்குவதென முடிவு செய்யப்பட்டது. 1920 தொடக்கம் 1941 வரையில் பிரான்சினால் ஆளுமை செய்யப்பட்ட லெபனானை விட்டு பிரஞ்சுத்துருப்புகள் இன்றும் வெளியேறவில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் துருப்புகள் லெபனானிற்கு அனுப்பப்பட்டு அங்கு சமாதானம் உறுதி செய்யப்பட்டால் தாம் அங்கிருந்து வெளியேறுவதாகவும், ஐ.நா. பாதுகாப்புச் சபையை உடனடியாகக் கூட்டுமாறும் பிரான்சு ஐ.நா.

பாதுகாப்புச்சபையின் தலைவரான SARDOR-SHAH-NAWAZ இடம் பிரான்சு கேட்டுக் கொண்டது. இதைத் தொடர்ந்து பிரித்தானிய, இத்தாலிய, அமெரிக்க அரச வட்டாரங்கள் ஐ.நா. பாதுகாப்புச்சபை கூட்டுவதற்கான தமது ஆதரவை வெளிப்படுத்தின. இது ஏகாதிபத்தியம் லெபனானை புரட்சிப்படைகளிடம் இழக்காது மாற்றுத்திட்டம் ஒன்றின் மூலம் புரட்சிப்படைகளின் கவனத்தை திசை திருப்பவும், அமீன் கமாயலின் ஆட்சியை தொடர்ந்து காப்பாற்றவும் வகுத்த சூழ்ச்சியாகும்.



ஐ.நா பாதுகாப்புச்சபை கூட்டுவது பற்றியும், ஐ.நா. பாதுகாப்புப்படைகள் பெய்ரூட்டை பொறுப்பேற்பது பற்றியும் கருத்து தெரிவிக்காது விட்டாலும் அமீன் கமாயல் ராஜினாமா செய்ய வேண்டும் என்ற கோரிக்கையில் நின்று புரட்சித் தலைவர்கள் NABIH-BERRI யும் WALID-JUMBLATT ம் என்னளவும் இறங்கி வரவில்லை. இவர்களுக்கு நேரடியாகவே ஆதரவும், ஆயுதமும் வழங்கி வரும் சிரியாவும், ஐ.நா. பாதுகாப்புச் சபையில் "வீட்டோ" அதிகாரமுடைய ரஷ்யாவும் ஏகாதிபத்தியத்தின் மாற்றுச் சூழ்ச்சித்திட்டமான ஐ.நா. துருப்புகளை பெய்ரூட்டில் நிலைகொள்ளச் செய்வது சம்பந்தமாக தமது நிபந்தனைகளை இவ்வாறு வகுத்துக் கொண்டன: அமெரிக்காவின் கடற்படைத்தாக்குதல் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்; லெபனானிய கடற்பிரதேசத்தை விட்டு அமெரிக்க ஆறாவது கடற்படை அகற்றப்பட வேண்டும்; ஐ.நா. பாதுகாப்புப்படைகள் பெய்ரூட்டை பொறுப்பேற்க முன்னர் அமெரிக்க, பிரித்தானிய, பிரான்சு, இத்தாலியத் துருப்புகள் மீண்டும் லெபனானில் நுழைய மாட்டாது என்ற உத்தரவாதத்துடன் வாபஸ் பெறப்பட வேண்டும்; அதன் பின்னர் லெபனானில் போரிட்டுக் கொண்டிருக்கும் அமைப்புகளுக்கிடையில் சமாதானத்திட்டம்

வகுக்கப்பட வேண்டும். ஐ.நா. பாதுகாப்புச்சபையின் கூட்டங்கள் முதலில் ரகசியமாகவும், பின்னர் வெளிப்படையாகவும் நடப்பதாக முடிவு செய்யப்பட்டது.

ஐ.நா. வின் பாதுகாப்புச்சபை கூட்டங்கள் முடிவுகள் வெளிவர முன்னரே சவூதி அரேபியாவின் சமாதான திட்டங்கள் அடுத்தடுத்த தோல்வியைத் தழுவிக் கொண்டிருந்தன. சவூதி அரேபியாவினால் லெபனான் நெருக்கடியைத் தீர்த்து வைக்க ஏற்பாடு செய்யப்பட்ட வல்லு-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளரான RAFIG-HARARI, டமாஸ்கஸுக்கும், பெய்ரூட்டிற்கும், ரியாட்டிற்கும் பறந்து திரிந்தார். சிரியத் தலைவர் அசாட் இஸ்ரேலுக்கும் - லெபனானிற்குமான MAY 17ம் திகதி செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட வேண்டும் என்பதில் கடுமையாக நின்றதுடன் இஸ்ரேலிய துருப்புகள் தற்போது நிலைகொண்டுள்ள AWALI நதிக்கரையை விட்டும் முழு தென்லெபனானையும் விட்டும் வெளியேற வேண்டும் என நிபந்தனை விதித்தார்.

சவூதி அரேபியாவின் எட்டு அம்சத் திட்டத்தில் மிகவும் முக்கியமான MAY 17ம் திகதிய ஒப்பந்தத்தை கிழித்தெறிய அமின் கமாயல் முன் வந்தார். ஆனால் தான் அதை கிழித்தெறிந்துவிட்டால் தம்மை ராஜினாமாச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை புரட்சிப்படைகள் கைவிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். MAY 17ம் திகதிய ஒப்பந்தத்தை கிழித்தெறிவதற்கு அமின் கமாயல் உடன்பட்டதை கேள்வியுற்ற அடுத்த கணம் இஸ்ரேலிய அமைச்சரவை ரத்தக்கொதிப்புற்றது. ஏகாதிபத்தியத்தின் உள் நெருக்கடிகள் வெளிவர ஆரம்பித்தது. இஸ்ரேலிய பிரதம மந்திரி YATZIKC-SHAMIR உம் பாதுகாப்பு அமைச்சர் MOSHE-ARENS உம் MAY 17ம் திகதிய ஒப்பத்தம் ஒரு சான்றெனவும் அதை லெபனான் கிழித்தெறிந்தாலும். தாம் அவ் ஒப்பந்தத்தின்படி விடாப்பிடியாக நடக்கப் போவதாகவும் அறிக்கை விட்டனர்.

[MAY 17ம் திகதிய ISRAEL-LEBANON ஒப்பந்தமானது தெற்கு லெபனானை, லெபனானிய இராணுவத்துடன் சேர்ந்து இஸ்ரேலிய துருப்புகளும் கண்காணிப்பதாகும்-இக் கண்காணிப்பானது தெற்கு லெபனானை விட்டு இஸ்ரேலினால் பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட பாலஸ்தீன போராளிகள் மீண்டும் தெற்கு லெபனானில் வந்து குடியேறுது இருப்பதற்காக என்ற சாட்டிலே செய்யப்பட்ட ஒப்பந்தமாகும். பாலஸ்தீன கொரில்லாக்கள் -



தெற்கு லெபனானில் இருந்து கொண்டு வடக்கு இஸ்ரேலிய கிராமங்களை தாக்குவதால் பாலஸ்தீன கொரில்லாக்கள் தெற்கு லெபனானுக்கு மீண்டும் வரக்கூடாது என்பதே இஸ்ரேலின் MAY 17ம் திகதிய ஒப்பந்தத்திற்கு காரணமாக வெளியிடப்பட்டுள்ளது]

இஸ்ரேலையோ, லெபனானையோ இழக்க விரும்பாத அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு GAMAYEL இன் ஆட்சியைக் காப்பாற்ற வழிதுறை தெரியவில்லை. ஆபிரிக்க, மத்திய கிழக்குக்கான பொருட்களின் ஏற்றுமதி, இறக்குமதிக்கான மிக முக்கியமான BEIRUT, TRIPOLI துறைமுகங்களையும் அமெரிக்க, ஐரோப்பிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளையும், அமெரிக்க, ஐரோப்பிய வங்கிகளையும், நிதிமூலதனங்களையும் கொண்ட லெபனானை இழக்க அமெரிக்க ஏகாதிபத்தியம் அங்ஙனொன்றும் விரும்பவில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தூண்டுதலில் சவூதி-அரேபியா மீண்டும் 4 அம்சக் கோரிக்கையொன்றுடன் பெய்ரூட்டை வந்தடைந்தது.

- புதிய பிரதம மந்திரியை நியமிப்பது.
- வெளிப்படையாக MAY 17ம் திகதிய ஒப்பந்தத்தைக் கிழித்தெறிவது.
- அனைத்து அமைப்புகளுக்குமிடையில் ஜெனிவாவில் ஒரு புதிய ஆட்சிக்கான பேச்சுவார்த்தையை ஒழுங்கு செய்வது.
- புதிய பிரதமமந்திரியின் தலைமையில் ஒருபுதிய மந்திரி சபையை உருவாக்குவது என்பதுவே சவூதியின் திட்டமாகும். புரட்சித்தலைவர் WALID-JUMBLATT

இதை "IT'S TOO LATE AND TOO LITTLE" என வர்ணித்ததுடன் AMIN-GAMAYAL ஆட்சியை விட்டு இறங்க வேண்டும் என்பதில் நின்று எள்ளளவும் இறங்கவில்லை.

செய்வதறியாது திகைத்த ஏகாதிபத்தியம் இஸ்ரேலிய விமானப்படையின் பலத்தை பரீட்சிக்க ஆரம்பி-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

த்துள்ளது DRUZE இன மக்களின் கிராமங்களின் மீது ஆகாயத்தில் நின்று குண்டுகள் போடப்பட்டன. 1000 க்கு மேற்பட்ட பாலஸ்தீன கொரில்லாக்கள் மீண்டும் தென் லெபனான் அருகேயும், அவாலி நதிக்கரைக்கு அருகேயுள்ள மலைப்பகுதிகளிலும் DRUZE மக்களின் முற்போக்கு சோஷலிசக் கட்சியினருடன் சேர்ந்து போரிடுவதால் தாம் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேலிய அரசாங்கம் தமது ஆகாய குண்டு வீச்சிற்கு காரணம் காட்டியுள்ளது. சிக்கல் நிறைந்த லெபனிய போராட்டங்கள் தொடர்ந்தும் பிசு நடை போடுகின்றது.

ஈரானில் வெடித்த இஸ்லாமிய புரட்சியானது இன்று ஏகாதிபத்தியத்திற்கு தாங்கொணாத மரணவலியை ஏற்படுத்தி விட்டது. கம்யூனிசத்தில் நின்று மக்களின் கவனத்தை திருப்ப கிறிஸ்தவ, முஸ்லீம் மதவாதம் பேசிய ஏகாதிபத்தியம் இன்று இஸ்லாமியப் புரட்சியின் முன்னால் அடிபணிந்து விட்டது. ஈரானில் தொடங்கிய வியாதி இன்று முழு மத்திய கிழக்கையும் இஸ்லாமின் பெயரால் அணிவகுத்து ஏகாதிபத்தியத்தை முகங்கொடுக்க வைத்திட்டு விட்டது. ஈரானியப்புரட்சி என்ன வேகத்தில் சவூதி அரேபியாவில் தோன்றியதோ (அது தோன்றவும் கூட) இன்று அதே வேகத்தில் முழு மத்திய கிழக்கிலும் தோன்றிவிட்டது. கம்யூனிசத்தை விட ஏகாதிபத்தியம் இஸ்லாமிற்கு அஞ்சி நடுங்கும் இன்றைய காலகட்டத்தில் மேலும் மதரீதியில், இனரீதியில் தொடர்ந்தும் சூழ்ச்சி செய்து பிரித்தாள முடியாததன் காரணமாகவே தமது ஐ.தே.க. மகாநாட்டில் ஜயவர்த்தன "TAMILS IN SRI-LANKA IS ONE OF THE MOST POWER FULL MINORITIES" என்பதை வெளிப்படையாகவே சொல்ல வேண்டி நேரிட்டது.

லெபனான் புரட்சி அனைத்து அராபியப் புரட்சியின் தொடக்கமாகட்டும்.



# சேர்னன்கோவ்

புதிய சோவியத் தலைவர் கொன்ஸ்ரன்ரின் சேர்னன்கோ செத்தாலும் மாறாத ஸ்டாலினிச அதிகாரியாவர். இவர் ஸ்டாலினிசப்பள்ளியின் பழைய பள்ளியிலிருந்து வந்தவர் ஆவார். இவர் தலைவராகத் தேர்தெடுக்கப்பட்டானது புதியன புகுதலுக்கும், சமுதாய மாற்றங்களுக்கும் சீர்திருத்தங்களுக்கும் எதிரான தெரிவாகும். இவர் மிகப் பிடிவாதமான பழமை விரும்பியாகும். இவரை அதிகாரத்திற்குக் கொண்டுவந்தது சோவியத்யூனியனின் அதிகாரத்துவத்தைக் கெட்டியாகப்பிடித்து வைத்திருப்பதற்கும் அதிகாரத்துவ வட்டத்தின் விசேடசலுகைகள் அடங்கிய வாழ்க்கையைப்பேணுவதற்குமாகும். குருசேவுக்குப் பிறகுவந்த அதிகாரிகளுள் தாராண்மைவாதிகள் என்று சொல்லப்படுகின்ற அந்திறப்போவ், பொட்கோனி, கோசியின் போன்றோரின் போட்டியாளன் என்பதே சேர்னன்கோவின் தகைமையாகும். சோவியத்யூனியனின் சராசரி இற



**Konstantin Chernenko, left, meets George Bush in Moscow.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ப்புவயதிலும் பத்துவருடங்களாற் கூடிய இவரை மீண்டும் அதிகாரத்துவத்திற்குக் கொணர்ந்ததானது சோவியத்யூனியனின் விசேடசலுகைகளை அநுபவிக்கின்ற ஒட்டுண்ணி அதிகாரத்துவம் நொருங்கப் போகின்றதென்பதன் சமிக்ஞையாகும்.

ஒரு சைபீரிய விவசாயின் மகனான இவரை அதிஉயர் பதவிக்குக் கொண்டுவந்ததானது இவரது கெட்டித்தனத்தாலோ தலைமைத் தகைமையாலோ அல்ல. இன்று அரசியற்குழுவிலுள்ள சகதோழர்களுள் வயதானவர் என்பதாலேயே இவர் பதவிக்கு வந்தார். செர்னன்கோவ் பதவியேற்றதானது ஏகாதிபத்தியத்தோடான சமாதான சகஜீவனக் கொள்கையைக் கெட்டியாகக் கடைப்பிடிப்பதும் உள்நாட்டிலும் கிழக்கைரோப்பாவிலும் சர்வாதிகாரத்தை நிலைபெறச் செய்வதுமேயாகும். இவர் பதவிப்பொறுப்பை ஏற்றதும் நிக்கராக்குவத் தலைவர் டானியல் ஒட்டேகாவையும், பிடல்காஸ்ரோவையும் மோஸ்கோவில் சந்தித்துப்பேசிய 24 மணித்தியாலங்களின் பின்பு பிரித்தானியப் பிரதம மந்திரி தாட்சரையும், அமெரிக்க உபஜனாதிபதி ஜோர்ச். புஸ்சோடும் கலந்துரையாடுகையில் தங்களோடு உறவை நெருக்கும்படி வேண்டுகோள்விடுத்தார். இந்த இரட்டைவேடமானது எதிர்காலத்திலும் கிறெம்ளின் அதிகாரத்துவம் எவ்வாறு தேசியவிடுதலை இயக்கங்களுக்கு எதிரான எதிர்ப்புரட்சி வேலைகளை செய்யும் என்பதைக் காட்டியது. அவர் பதவியேற்றதை அடுத்த பல பிரசித்தக்கூட்டங்களிலே சோவியத்யூனியனின் வெளிவிவகாரவேலைகள் என்ன புதிய பரிமாணத்தை எடுக்கவிருக்கிறது என்பதையோ வாசிங்டன் சதிகளைக் கண்டித்தோகுரல் கொடுக்கவில்லையாகும்.

1917ல் ருசியப் புரட்சி நடக்கும் பொழுது செர்னன்கோவுக்கு வயது ஆறு. தனது 12வது வயதில் பாடசாலை வாழ்க்கையை ஆரம்பித்த இவர் 1931இல் இராணுவ சேவையில் இருந்தபொழுது கம்யூனிஸ்ட்கட்சியின் அங்கத்தவரானார். அவர் தனது பிறந்தகிராமத்திலே கட்சியின் பிரச்சாரவேலைகளை மேற்கொள்ளப் பணிக்கப்பட்டார். இவர் 30வருடம் ஸ்டாலினது கொடுங்கோன்மை ஆட்சியை நிலைபெறச் செய்வதற்கு துணைபுரிந்ததன் பலனாகப் பதவி உயர்த்தப்பட்டார். இரண்டாம் உலகயுத்தத்தின் போது தத்துவார்த்தத்துறையின் மாவட்டச் செயலாளரானார்.

1948ல் மோஸ்கோவிலுள்ள கட்சிப்பாடசாலையில் இரண்டுவருடம் அரசியற்கல்வி பயின்றார். அதன் பின்பு மோல்டாவியன் மாநிலத்தில் பிறெஸ்னேவோடு நிர்



வாகத்துறையில் வேலைசெய்தார். மோல்டாவியனில் பிறெஸ்னேவும் செர்னன்கோவும் அரசியல் எதிரிகளை ஒடுக்குவதில் கைதேர்ந்தவர்கள் ஆகும். இவர்களது ஒடுக்குமுறையானது குற்றம் சாட்டப்பட்டவர்களை சைபீரியாவுக்கு நாடு கடத்தும் மட்டும்வரை செயற்பட்டது. 1953ல் தனது அரசியல்தொழிலுக்கு வேண்டிய டிப்ளமோ கல்வியைக் கற்றதன் பின் 1956ல் பிரெஸ்னேவால் மோஸ்கோவுக்குக் கொண்டுவரப்பட்டு கட்சியின் பிரச்சார வேலைகளுக்கும் கிளர்ச்சிவேலைகளுக்கும் ஈடுபடுத்தப்பட்டார் 1960ல் இவர் சுப்றீம் சோவியத்சபைக்குப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரஸ்னேவின் பிரத்தியேக உத்தியாளரானார். குருசேவை அடுத்து பிறெஸ்னேவ் கட்சித் தலைவராக வந்ததைத் தொடர்ந்து செர்னன்கோவ் பிரஸ்னேவின் அந்தரங்கச் செயலாளரானார். 1982ல் பிரஸ்னேவ் மரணமாகும் வரை இவர் பிரஸ்னேவின் அந்தரங்கச் செயலாளராகக் கடமையாற்றினார். 1976ல் கட்சியின் செயலாளர் குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1978ல் பூரண வாக்குரிமையுடைய அரசியற்குழு உறுப்பினர் ஆனார். 1982ல் மைக்கேல் சுஸ்லோவ் மரணமானதன்பின் பிரஸ்னேவுக்கு பின் சோவியத்யூனியனின் தலைவராகவேண்டியவர் உட்கட்சி சூழல்களினாலும் இவரது மாறுநிலை மறுவாதப்போக்கினாலும் தலைமைப்பதவிப்போட்டியில் கே.ஜி.பி தலைவரான அந்திரபோவினால் தோற்கடிக்கப்பட்டார். செர்னன்கோவ் 30வருடகாலமாக பிரெஸ்னேவின் ஆத்மவிசுவாசம் மிக்க ஊழியனாகும். பிரஸ்னேவினது சகாப்தத்தில் ஸ்டாலினிச அதிகாரவர்க்கத்தால் நடாத்தப்பட்ட நானாவித சதிவேலைகளின் இரகசியங்களையும் தெரிந்தவர் ஆவார். 1924ல் லெனின் மரணமானதன் பின் சோவியத் அரசின் அதிகாரத்துவம் படிப்படியாக இறுக்கப்பட்டது. மாக்ஸ் ஏங்கல்சுக்குப் பின்னதாக லெனின் பாட்டாளி வர்க்க ஆட்சியதிகாரத்திலே அதிகாரத்துவம் வளரவிடக் கூடாதென்பதைச் சொல்லியதோடு தனது மரணத்தின் விழிம்பில் கூட அதிகாரத்துவத்தைத் தோற்கடிக்கப் பாடுபட்டவராகும். அவர் 1917 ஒக்டோபர் புரட்சிக்கு முன் எழுதிய அரசும் புரட்சியும் என்ற புத்தகத்தில் பின்வருமாறு பகருகிறார் பாட்டாளிவர்க்கத்திற்கு ஓர் அரசு வேண்டும் என்று எல்லாச் சந்தர்ப்பவாதிகளும் உங்களுக்குச் சொல்லக் கூடும். ஆனால் சந்தர்ப்பவாதிகள் ஓர் உலர்ந்து உதிரும் அரசுவேண்டும் என்று சொல்லமறந்து விடுகிறார்கள். அதாவது ஓர் அரசு அமைக்கப்படவேண்டும். அது அமைந்த மாத்திரத்தே உதிர ஆரம்பிக்கவேண்டும். இந்த விமர்சனத்தை ருசியன் மென்ச



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விக்கலுக்கு எதிராகவும் பிரித்தானிய பாபியன்களுக்கு எதிராகவும் தொடுத்தார். ஆனால் இன்று சோவியத் அதிகாரத்துவப் பாரம்பரியமானது அரசை உதிர விடுவதற்குமாறாக மேலும் அதிகாரத்தை மடங்காக்கிக் கொண்டு வந்துவிட்டது. சமுகத்திலே விசேட சலுகைகளை அனுபவிப்பவர்களின் நலன்களைப்பேணுவதற்கு அதிகாரத்துவம் தேவைப்படுகிறது. முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் போது தோன்றும் அரசுக்கும் சோஷலிசப் புரட்சியின் போது தோன்றும் அரசுக்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில் முதலாளித்துவ ஜனநாயக அரசில் மிகவும் நறுக்கானதோர் அரசு வளர்த்தெடுக்கப்பட வேண்டியிருக்கிறது. சோஷலிசப்புரட்சியில் தோன்றும் அரசானது படிப்படியாக உலர்ந்து உதிரும் அரசாகத் தோன்றவேண்டி இருக்கிறது. லெனின் மேலும் கூறுவது நிர்வாக உத்தியோகத்தர்களும் நிரந்தர இராணுவமும் முதலாளித்துவ சமுதாயத்தில் தோன்றிய ஒட்டுண்ணிகளாகும் முதலாளித்துவ சமுதாயத்தின் உள்முரண்பாடுகள் இதைத் தோற்றுவித்தன. 1917ல் ஆட்சியைக் கைப்பற்றின மறுநாள் தொடக்கமே லெனின் இப்பேற்பட்ட ஒட்டுண்ணிகள் தோன்றுவதற்கு எதிராகப் போராடினர்.

அவரது அரசும் புரட்சியிலே ஒவ்வொரு பாடத்திலும் மீண்டும் சொல்வது என்னவெனில் சுரண்டுகின்ற வர்க்கத்தைத் தோற்கடித்த பின்னர் பாட்டாளிவர்க்கம் பழைய அதிகாரத்துவ ஐந்திரத்தை நிர்மூலமாக்கிவிட்டு தொழிலாளவர்க்கத்திற்கு சேவகஞ்செய்யக்கூடிய நிர்வாக அமைப்பைத் தொழிலாளர்களிடமிருந்து தோற்றுவிக்கவேண்டும் அதிகாரத்துவம் வளரவிடாது தடுக்கவேண்டுமானால் மாக்ஸ் எங்கல்ஸ் வகுத்த பின்வரும் சூத்திரத்தை கடைப்பிடிக்கவேண்டும் என்று இடித்துக் கூறினர். 1. தேர்தல் மூலம் நிர்வாகத்தரைத்த தேர்ந்தெடுப்பதுமட்டுமல்ல வேண்டியபோது அவரைப் பதவியிலிருந்து இறக்கக்கூடியதாகவும் இருக்கவேண்ம். 2. நிர்வாக உத்தியோகத்தர் எவரது சம்பளமானது ஒருநாளும் சாதாரண தொழிலாளரது சம்பளத்திலும் அதிகமாக இருக்கக் கூடாது. 3. தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு குறிப்பிட்டகாலங்களில் மேற்பார்வையாளர்களாகவும் நிர்வகிப்பவர்களாகவும் கடமை புரிந்தால் ஒருவராவது அதிகாரி ஆகிவிடமாட்டார்.

மற்றைய அரசுகளைப் போல தொழிலாளவர்க்க அரசையும் அன்னிய ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாப்பதற்காக ஒரு விசேட இராணுவம் அமைக்கப்படவேண்டும் ஆனால் அது நிரந்தர இராணுவமாக அமையக் கூடாது. நிரந்தர இராணுவத்திற்குப்



பதிலாகப் பொதுமக்களை ஆயுதபாணியாக்க வேண்டும். லெனின் அதிகாரத்துவத்திற்கு எதிரான போராட்டத்தின் உச்சக் கட்டமாக 25 டிசெம்பர் 1922ல் எழுதிய மரண சாசனத்தில் ஸ்டாலின் மிகமுர்க்கத்தனமானவர் அவர் பொதுச்செயலாளராக இருப்பதற்குத்தகுதியற்றவர் ஆதலால் நான் கோரிக்கைவிடுகிறேன் ஸ்டாலினை அப்பதவியிலிருந்து இறக்கிவிட்டு வேறு ஒரு தகுதிவாய்ந்தவரை அமர்த்துங்கள் அவர் ஸ்டாலினிலிருந்து எல்லாவிதத்திலும் வேறுபட்டிருக்க வேண்டும். மிகப் பொறுமைசாலியாக, மிக விசுவாசம் உள்ளவராக, மிக இங்கிதமானவராக, தோழர்களைப் பற்றிச் சிந்திப்பவராக, எழுந்தமானத்திற் செயற்படாதவராகத் தேர்ந்தெடுங்கள். அவர் ஆட்சியைக் கைப்பற்றிய நாட்தொக்கம் மரணம் அடையும் வரை அதிகாரத்துவத்தை வளரவிடாமல் தடுக்க எடுத்தபோராட்டம் இன்னும் பூரணத்துவத்தை அடையவில்லை. லெனின் செதுக்கிய சோவியத்யூனியல் வழிவழி ஸ்டாலினிசம், தொடருகிறது. அந்த ஒட்டுண்ணி அதிகாரத்துவத்தின் இன்றைய வெளிப்பாடுதான் செர்னன்கோ. வரலாறு நீதிவழங்கட்டும்.

# முதலாளித்துவம் ஏன் நெருக்குவாரத்தில்


ஜயவர்த்தனாவின் பாதுகாவலர்கள் பாரிய நெருக்கடியில் அகப்பட்டுக் கொண்டுள்ளார்கள். அமெரிக்க, ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் சந்தை நெருக்கடியானது முன்னெப்போதுமில்லாத அளவுக்கு விசுவரூபம் எடுத்து விட்டது. ஐரோப்பிய பொதுச் சந்தையின் விவசாய உற்பத்தி பண்டங்களின் விலை குறித்த பொது உடன்பாடு பிரஞ்சு விவசாயிகளை சினமடையச் செய்துள்ளது. பிரித்தானியாவிலிருந்து பிரான்சுக்கு வருகின்ற ஆடு, கோழி போன்றவற்றின் விலைகள் 5%ற்கு மேல் குறைவாக இருப்பதனால் தமது ஆடு, கோழி மற்றும் இதர விவசாயப் பொருட்களை விற்க முடியாமல் திண்டாடும் பிரஞ்சு விவசாயிகள் பிரித்தானியாவிலிருந்து வரும் லொறிகளை ரோட்டின் நடுவே மறித்து கடத்திச் சென்றுள்ளனர். வைன் உற்பத்தியில் பாதிப்புற்றுள்ள பிரஞ்சு விவசாயிகள் 5,000 லீட்டர் மலிவான வெளிநாட்டு வைனை ரோட்டிலே ஊற்றி தமது எதிர்ப்பைக் காட்டியுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஐரோப்பிய பொதுச்சந்தை விவசாய உற்பத்தி




ஐரோப்பிய பொதுச் சந்தை நாடுகளில் 26.1% மான விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்யும் 1.85 மில்லியன் விவசாயிகளின் போராட்டம் சென்ற மாதம் பிரஞ்சு அரசாங்கத்தை உலுப்பியது. புகைவண்டி பாதைகளை தமது லொறிகளைக் கொண்டு, டிராக்குகளை கொண்டு மறித்ததன்மூலம் தெற்கு பிரான்சின் போக்கு வரத்து சின்னாபின்னமாக்கப்பட்டது. முன்னைபிரஞ்சு ஜனாதிபதி Gis-card இனால் பிரான்சின் Green Oil (பசிய எண்ணெய்)" என வர்ணிக்கப்பட்ட பிரஞ்சு விவசாயம் நெருக்கு வாரத்தில் புகுந்த வேளையில் தான் பிரஞ்சின் லொறி ஓட்டுனர்களுக்கும் இத்தாலிய சுங்க அதிகாரிகளுக்கு மிடையிலான முரண்பாட்டால் பிரான்சில் சரித்திரம் கண்டிராத வண்டி செலுத்துனரின் போராட்டம் வெடித்தது.

பிரஞ்சு லொறி ஓட்டுனர்கள் அதிவேக வீதிகளில் மிக மெதுவாக லொறிகளைச் செலுத்தியும், பல வீதிகளில் லொறிகளை குறுக்கே நிறுத்தியும் ஆர்ப்பாட்டம் செய்தனர். எல்லைகளில் சுங்க பரிசோதனைகள் துரிதப் படுத்தப்படவேண்டும் எனத்தொடங்கிய அவர்களது போராட்டம் மேலும் பல கோரிக்கைகளை பின்னர் உள்ளடக்கிக்கொண்டது. போராட்டத்தில் இழந்த வேலை நேரத்திற்கு



சம்பளம் வழங்கப்படவேண்டுமெனவும், இளைப்பாறும் வயதிற்கு முன்னரே இளைப்பாற அனுமதிக்கப்படவேண்டும் எனவும், டீசலுக்கான வரியை நீக்கும்படியும் கோரி அவர்கள் நடாத்திய எட்டு நாள் தொடர்ச்சியான போராட்டத்தின் இரண்டாவது நாளே 23,000 வண்டி செலுத்துனர் சங்கத்தின் தலைவர் Maurice voiron உடன் இடைக்கால உடன்பாட்டுக்கு வர பிரஞ்சு போக்கு வரத்து "கம்யூனிஸ்ட்கட்சி" அமைச்சர் Fiterman நிர்ப்பந்திக்கப்பட்டார்.

தொழிலாள வர்க்கத்தின் இயல்பான புரட்சிகரக் குணம்சம் இத்தாலிய, ஆஸ்திரிய, ஜேர்மன் வண்டி ஓட்டுனர்களையும் தொற்றிக் கொண்டது. இத்தாலிய வண்டிஓட்டுனர்களும் பிரஞ்சுப்பாணியைப் பின் பற்றினர். இத்தாலிய அரசாங்கம் அவசர அவசரமாக இத்தாலிய சட்டத்தை ஐரோப்பிய பொதுச் சந்தை சட்டத்திற்கேற்ப மாற்றியமைக்க வேண்டி நேரிட்டது. இத்தாலிய போக்கு வரத்து மந்திரி Clandiosignorile இத்தாலிய வண்டி ஓட்டுனர்களின் 4 பெரிய தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்த தயாரனதுடன் முன் நிபந்தனையாக 850 மேலதிக சுங்க பரிசோதகர்களை எல்லைகளில் வேலைக்கு அமர்த்தியது. ஐரோப்பிய வண்டி ஓட்டுனர்களின் ஒரு கிழமைப் போராட்டத்திற்கு மத்தியில் ஐரோப்பிய சந்தையில் உணவுப் பொருட்களின் விலைகள் கூட ஆரம்பித்தன.

ஏற்கனவே ஏற்றுமதி இறக்குமதி 1.7 பில்லியன் டொலர் துண்டுவிழும் இஸ்ரேலின் பிரதமர் Yitzhak Shamir பெப்ரவரி 19 ம்திகதி Brussels க்கு விஜயம் செய்து ஐரோப்பிய பொதுச்சந்தை பிரதிநிதிகளைச் சந்தித்தார். ஸ்பெயின், போர்த்துக்கல் போன்ற நாடுகள் ஐரோப்பிய பொதுச்சந்தையில் சேர விருப்பதன் காரணத்தால் 'இஸ்ரேலின் வருடாந்த விவசாய உற்பத்தியான 500 மில்லியன் டொலர் விவசாயப்பொருட்களை ஐரோப்பிய பொதுச்சந்தை நாடுகளுக்கு விற்கமுடியாத நிலை உருவாக இருப்பதால் ஏற்கனவே ஆட்டம் கண்டுள்ள பொருளாதாரம் மேலும் நெருக்கடிக்குள்ளாகியது.

இற்றை நாள் வரை அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகம் முழுவதற்கும் மூலதனத்தை ஏற்றுமதி செய்ததன் மூலம் நிதி ஆதிக்கம் செலுத்தி வந்தது. அமெரிக்க ஏகாதிபத்தியம் வெளிநாடுகளில் 834.2 பில்லியன் டொலர் மூலதனத்தை இட்டு தொடர்ச்சியாகச் சுரண்டி வருகின்ற வேளையிலே ஐரோப்பிய ஜப்பானிய மூலதனங்கள் அமெரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

க்காவின் உயர் வட்டி வீதத்தால் கவரப்பட்டு அமெரிக்காவை நோக்கிப் பாய்கின்றன. இன்று 711.4 பில்லியன் வெளிநாட்டு மூலதனம் அமெரிக்காவில் குவிந்து விட்டது. இப்போக்குத் தொடர்ந்து ஏறிச்செல்லும் டொலரின் பெறுமதியால் கூடுமானால் வெகுவிரைவில் அமெரிக்கா ஒரு கடன்கார நாடாக மாறும் அபாயம் நெருங்கி முதலாம் உலக யுத்தத்திற்கு முன்னைய காலத்தை நோக்கி அமெரிக்க பொருளாதாரத்தின் சக்கரங்கள் சுழல ஆரம்பித்த வேளையிலேதான் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இராணுவ பலம் லெபனானில் அமின்கமாயல் ஆட்சிக்கு முண்டு கொடுக்க முடியாது தடுமாறிக் கொண்டிருக்கின்றது. Amal விடுதலை இயக்கத்திடமும் முற்போக்கு சோசலிசக்கட்சியிடமும் மேற்கு பெய்ரூட் வீழ்ச்சியடையவே பெய்ரூட் விமான நிலையத்திற்கு அருகாமையில் அமைந்திருந்த அமெரிக்கத் துருப்புகள் "மெடிட்டரேனியன்"கடலினுள் நிலை கொண்டுள்ள ஆறாவது கடற்படையினுள் அனுப்பப்பட்டது. பெப்ரவரி 26 ம் திகதி மதியானம் 12.37 க்கு அமெரிக்காவின் கடைசித் துருப்பு பெய்ரூட்டை விட்டு வெளியேறிய மூன்று நிமிடங்களினுள்ளேயே Amal (நம்பிக்கை) படைகளின் புரட்சிகர பச்சைக் கொடி முன்னர் அமெரிக்கத் துருப்புகள் நிலை கொண்டிருந்த கட்டிடத்தின் உச்சிக்கு ஏற்றப்பட்டது. விழுந்தும் மீசையில் மண்படாத அமெரிக்க ஏகாதிபத்தியம் கடலினுள் நின்றவாறு Newjersy கப்பலின் 16 இஞ்சி குழாய்கள் மூலம் சிரிய கட்டுப்பாட்டிலுள்ள மலைப்பிரதேசங்களுக்கு குண்டு பொழிந்தது. அமெரிக்க ஏகாதிபத்தியம் சூழ்ச்சியால் நடக்கும் ஈரான்-ஈராக் போரிலே ஈரான் Hormuz நீரிணையை முழுவதாக பயமுறுத்தியதைத் தொடர்ந்து எண்ணெய் விலை உயரக்கூடும் என்பதை முன்கூட்டியே அறிந்துள்ள அமெரிக்க ஏகாதிபத்தியம் தமது பெற்றோலிய சேமிப்பை சந்தையில் விற்க இருப்பதாக றேகன் நிர்வாகம் அறிவித்ததானது புரட்சிகர ஈரானின் விட்டுக்கொடுக்காத போர்க்குணம் ஏகாதிபத்தியத்தின் மேல் கொண்டு வரும் நெருக்குவாரத்தை வெளிப்படுத்தியுள்ளது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பொருளாதார, இராணுவ பலமானது வரலாற்றால் உரைத்துப் பார்க்கப்பட்டு வருகின்ற வேளையிலேயே அதன் ஆத்ம விசுவாசியான ஜேர்மனிய ஏகாதிபத்தியம் மில்லியன் கணக்கான டொச் மார்க்குகளை பிரஞ்சு வண்டி ஓட்டுனரின் போராட்டத்தால் இழந்து கொண்டிருந்தது. பிரான்சிலிருந்தும், இத்தாலியில் இருந்தும் மரக்கறி, பழவகைகள் வராது விடவே ஜேர்மனிய சந்தையில் அவற்றின் விலை உயர்ந்தது. பிரான்சு வண்டி ஓட்டுனரின் ஒரு கிழமை போராட்டத்திற்கு முகம் கொடுக்கமாட்டாத அளவுக்கு பலமிழந்து போயிருக்கும் ஜேர்மனிய ஏகாதிபத்தியம் இன்று அதன் எதிர்க்கட்சியான எஸ்.பி.டி யானது 35 மணித்தியால போராட்டத்தை வெளிப்படையாக அங்கீகரித்ததுடன் மேலும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. ஜேர்மனியின் மற்றைய எதிர்க்கட்சியான பசிய கட்சி( Green Party)யானது ஜேர்மனியின் வெளிநாட்டு உளவு வலையமைப்பின் (F.I.A)வேலைகளை பார்வையிடக்கூடாது என்ற தீர்மானத்தை ஜேர்மனிய பாராளமன்றத்தில் பிரேரித்தது 271 க்கு 210 வாக்குவித்தியாசத்தில் ஆளும் கட்சியான சி.டி.யு நிறைவேற்றியுள்ளது. N.A.T.O அமைப்பை Green Party எதிர்ப்பதினால் இந்த நடவடிக்கையை ஜேர்மன் அரசாங்கம் எடுத்துள்ளது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஏஜென்டுகள் ஆளும் நாடுகளில் ஒன்றான சூடானில் சூடான் மக்கள் விடுதலை முன்னணி (S.E.L.F)இன் செயற்பாடுகள் புதிய பரிமாணத்தையடைந்துள்ளன. இரண்டு இராணுவ காரிசன்களை வெற்றி கொண்ட S.P.L.Fஆனது வடக்கு சூடானில் இருந்து பிரிந்து தெற்கு சூடானுக்கு உரிமை கோரி நடத்தும் போராட்டத்தில் கடந்த மாதம் பிரான்சினால் நடாத்தப்பட்டும் கட்டிட முகாங்களை தாக்கியுள்ளதுடன் ஆறு வெளிநாட்டவரை பயணக் கைதிகளாக்கியுள்ளது. "பாவி போகும் இடமெல்லாம் பள்ளமும் திட்டியும்" என்பது போல அமெரிக்க ஏகாதிபத்தியம் செயற்கையாக ஏற்படுத்தி வைத்துள்ள அத்தனை அரசாங்கங்களும் பாரியமட்டத்தில் நெருக்கடிக்குள்ளாகியுள்ளன. ஜயவர்த்தனு அரசாங்கத்தின் கீழ் மக்கள் காற்றைக் குடித்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. யாழ்ப்பாணத்தில் குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு கடைக்குப் போக முடியாத நிலைக்கு பெற்றோர்கள் வந்து விட்டார்கள். குழந்தை ஒரு ரொபி (Toffee )ஐக் கையில் எடுத்துவிட்டால் தகப்பன் 50 சதம் தொடக்கம் ஒரு ரூபா (நல்ல ரொபிக்கு) வரை கொடுக்க வேண்டும். ஒரு கதலி வாழைப்பழம் ஒரு ரூபா, ஒரு முட்டை 1.80 சதம், ஒரு ரீ (Tee ) 1.50 சதம், ஒரு வடை 2ரூபா, பிளேன்ரீ 75சதம், பாண் 3.05சதம், கிலோ அரிசி 8.50சதம் தேங்காயை யாழ்ப்பாண சந்தையில் காணமுடியாது. கண்டால் 8ரூபாவுக்கு குறையாது. தலைமயிர் வெட்ட 5ரூபா. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு போக பஸ்ஸில்-100 ரூபா. இன்டர் சிற்றி புகை வண்டியில்-125 ரூபா




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இவ்வாறான நிலைமைகளில் மக்கள் ஒரு நேரச் சாப்பாட்டை சாப்பிட்டாவது மானத்துடன் வாழ முடியாத நிலை வெகு சீக்கிரம் உருவாகப் போகின்றது. ஜயவர்த்தனா அரசாங்கம் மக்களை உணவில்லாமல், மருந்தில்லாமல் சாகவிடுவதைத் தவிர வேறு வழியில்லை. ஹெலிடிமெல்லின் பிச்சைப் பாத்திரத்தை நிறைத்தவர்களே இன்று பிச்சைப் பாத்திரத்தை ஏந்த வேண்டிய நிலையேற்பட்டுவிட்டது.

இவ்வாறான நிலைமைகளில் எமது மக்கள் தாங்கொணா வலியுடன் புரட்சிக்குப் புகுவது திண்ணம். மக்கள் பசி கிடந்து சாவதைவிட போராடி மடிவதே மேல் என்ற நிலைக்கு வருவார்கள் என்பதை சர்வதேச முதலாளித்துவத்தின் நெருக்குவாரத்தோடு சார்பு ரீதியாக புரிந்து கொள்ள முடியாதவர்கள் இன்று வெறுமனே குருநகர் நாவலை முகாமைத் தாக்கி "ஆத்திரமூட்டல்" நடவடிக்கையை செய்து கொண்டிருக்கின்றனர்.

இந்த "ஆத்திரமூட்டல்கள்" ஜயவர்த்தனா அரசாங்கம் மீண்டும் ஓர் இனக்கலவரத்தை ஆரம்பிப்பதை சுலபமாக்கும். ஜயவர்த்தனா காரணம் காட்ட ஒரு சந்தர்ப்பத்தை தமிழ் ஈழ தீவிரவாதிகளே ஏற்படுத்திக் கொடுத்து விட்டு "மக்கள் புரட்சி"யைப் பற்றி பிதற்றிக் கொண்டு திரிவதால் தமக்கு புரட்சிகர முலாம் பூச முற்படுகின்றார்கள். வரலாற்றின் இயங்கியலைப் புரியாத இயக்கங்களாவும், நடுத்தர வர்க்கப் பொறுமையற்றமனோ நிலையாலும் வரும் பின்விளைவுகளுக்கு வட்டி செலுத்திய தமிழ் மக்களால் ஓர் புரட்சிகர இயக்கத்தை கட்டி வளர்க்க முடியும் என்பதை தற்சமயம் புரிந்து கொள்வோம்.

## தோழர்களே!

**உங்கள் ஆக்கங்கள், கவிதைகள், கட்டுரைகள் முதலியனவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்.**

EDITOR V. MAHADEVA.

Thamil Eelam International Liaison Committee
P.O. Box 2004, 7030 Böblingen
West Germany



# ஏகாதிபத்தியமும்
# இந்திய தேசிய முதலாளித்துவம்

அணிசேரா நாடுகளில் மிகப்பலம் பொருந்திய நாடாக திகழும் இந்தியா உலக ஏகாதிபத்தியத்திற்கு தலைவலியை ஏற்படுத்தி வருகின்றது. 1947ம் ஆண்டின் பின்னர் நேரடி காலனியாதிக்கம் ஒழிக்கப்பட்டாலும் கூட இந்தியாவை பொருளாதார ரீதியில் கட்டுப்படுத்தியும் சுரண்டியும் வருகின்றது உலக ஏகாதிபத்தியம். அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், இந்திய தேசிய முதலாளித்துவத்திற்கும் உள்ள முட்டி மோதல்களானது கடந்த 3 தசாப்தங்களிலும் இல்லாத அளவு 1980 களில் புதிய பரிணாமத்தை அடைந்துள்ளது.

இந்திய – பாக்கிஸ்தான் போரின் பின்னர் செய்துகொள்ளப்பட்ட இந்திய - ரஷ்ய ஒப்பந்தத்தின் பின்னர் இருநாடுகளுக்குமிடையே உள்ள உறவுகள் நன்றே விருத்தியடைந்து வருவதும், இந்தியாவினது அணுகுண்டுத் தயாரிப்பும், வல்லமைமிக்க இராணுவமும் இந்தியாவினது இராணுவச் சக்தியை உலக அரங்கில் உயர்த்தியுள்ள வேளையில், இந்திய தேசிய முதலாளித்துவம் ஓர் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை செய்து முடிக்கத்திராணியற்று இலட்சக்கணக்கான மக்களை வீதிகளிலே வாழவிட்டுக்கொண்டும், சாகவிட்டுக் கொண்டும் இருக்கின்றது.

பெப்ரவரிப்புரட்சிபற்றி குறிப்பிடுகையில் லெனின் " ஏற்கனவே முதலாளித்துவம் அதன் அதீத வளர்ச்சியை மேற்கத்தேய நாடுகளில் பெற்றதன் காரணமாக சந்தைக்கான போட்டாபோட்டி மிகக் கடுமையாகி விட்டது. இக்கால கட்டத்தில்

www.tamilarangam.net

ஒரு பின்தங்கிய நாட்டில் முதலாளித்துவப் புரட்சி நடப்பது எங்ஙான்றும் சாத்தியமாகாது. அதற்குரிய காலங்கடந்துவிட்டது" எனக் குறிப்பிட்டார்.

இன்று, சர்வதேச முதலாளித்துவங்கள் சந்தை நெருக்கடியைத் தீர்த்துவைக்க முடியாது தமக்குள் இழுபறிப்பட்டுக் கொண்டிருக்கையில் இந்தியாவின் தேசிய முதலாளித்துவம் முதலாளித்துவப் புரட்சியை செய்துமுடிப்பது எங்ஙான்றும் சாத்தியமாகாது. இந்திய தேசிய முதலாளித்துவம் ஒரு முதலாளித்துவப் புரட்சியைச் செய்துமுடிக்கச் சக்தியற்றதுடன், சோஷலிசப் புரட்சியை கொண்டுவரும் வர்க்க குணம்சமுமற்றதாகும். இந்திய தேசிய முதலாளித்துவத்தின் ஒரேயொரு முற்போக்குக் குணம்சமானது அதற்கும் ஏகாதிபத்தியத்திற்குமான முரண்பாடேயாகும்.

அமெரிக்க ஏகாதிபத்தியமானது இந்திய தேசிய முதலாளித்துவத்தின் மேல் கொண்டுவரும் நெருக்குவாரமானது பல வடிவங்களை தாங்கியது. அமெரிக்க C.I.A யின் உளவுப்படைகள் இந்திய இராணுவ இரகசியங்களை உளவு பார்த்து வருவது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆளும் கட்சியான இந்திரா காங்கிரசுக்கு எதிராக 10.05.1981, 17.09.1981, 16.08.1982 காலப்பகுதியில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைகளின் பின்னணியில் அமெரிக்க உளவு ஸ்தாபனம் இருப்பதாக நம்பப்படுகின்றது. ஒரு கோடியே இருபது லட்சம் சீக்கிய சிறுபான்மை இனத்தின் தனிநாட்டுக் கோரிக்கைப் போராட்டத்தை தமக்கு சாதகமாக பயன்படுத்த முயற்சிக்கின்றது அமெரிக்க ஏகாதிபத்தியம். மேனகா இந்திரா சண்டையில் அமெரிக்க ஏகாதிபத்தியம் அரசியல் லாபம் பெறமுயற்சிக்கின்றது. அஸ்ஸாம் பிராந்திய வாதம், காஷ்மீர் முஸ்லீம் இயக்கத்தின் நடவடிக்கைகளிலும் அரசியல்



லாபம் சம்பாதிக்க C.I.A முனைகின்றது.

இந்திய - பாக்கிஸ்தான் எல்லைச் சம்பவங்களும், பாக்கிஸ்தானின் ஆயுதக் கொள்வனவும் இந்தியாவை சின்னபின்னப்படுத்தவே. பாகிஸ்தானின் காஷ்மீர் வசமுள்ள ஆஸாத் பகுதியில் இராணுவ ஒத்திகை நடாத்திவரும் பாக்கிஸ்தான் மேலும் "கில்கிட்" என்ற இடத்தில் சீனாவின் உதவியுடன் விமானத்தளமொன்றை நிர்மாணிக்கவும் உள்ளது.

சீனாவுக்கு விஜயம் செய்த பங்களாதேஷ் விமானப் படைத்தளபதியிடம் சீன உதவிப்பிரதமர் பங்களாதேஷ் விமானப்படையை வலுவூட்ட இராணுவ உதவிகளை அளிப்பதாக உறுதிகூறியுள்ளதானது இந்தியா மீதான இராணுவ ஆக்கிரமிப்பிற்காகும். இந்தியாவைச் சுற்றியுள்ள பாக்கிஸ்தான், பங்களாதேஷ், சீனா, நேபாள், இலங்கை போன்ற நாடுகளுடன் இந்தியாவிற்கு தற்போது மிக மோசமான உறவுகளேயுள்ள இவ்வேளையில், ஜனாதிபதி றேகனின் அழைப்பை ஏற்று இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன வாஷிங்டன் செல்கின்றார். முதலாம், இரண்டாம் உலகப் போர்களில் மிகமுக்கிய கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தளமாக செயற்பட்ட திருகோணமலைத் துறைமுகத்தை அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம் கையளிப்பது வெகு சீக்கிரம் முடிவாக்கப்பட இருக்கின்றது.

இவ்வாறான நிலைமைகளைக் கருத்திற் கொண்டே திருமதி இந்திரா காந்தி "இந்தியா சுற்றி வளைக்கப்பட்டு ஆபத்துக்குள்ளாகியிருக்கின்றது. ஆகையால் நாட்டுமக்கள் விழிப்புடன் செயலாற்ற வேண்டும்" என பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அறைகூவல் விடுத்துள்ளார்.

இந்தியாவிற்கு எதிராகக் கண்ணிவைக்கப்பட்டிருக்கும் ஏகாதிபத்திய நெருக்குவாரங்களுக்கு மத்தியில்

www.tamilarangam.net

ந்து இந்தியா இன்றோ நாளையோ மீளக்கூடிய முன்னேற்ற இன்றைய ஆளும் வர்க்கத்திடம் இல்லையாகும். ஆதலால் சீக்கிய, அசாமிய முஸ்லீம் தேசிய இனங்கள் கால காலமாக இந்தச் சாதி அமைப்பு முறையின் கடைக்கோடியில் அழுகிக்கொண்டிருக்கும் பஞ்சம், பசி, பட்டினியோடான வாழ்க்கை முறையைப் போக்குவதற்குப் போராடாமல் எப்படி அமைதியாக இருக்க முடியும். ஆனால் இத் தேசிய இனங்களின் போராட்டங்களும் தேசிய முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்கான போராட்டமாக இருப்பதால் அது அவர்கள் எதிர்பார்த்த வடிவத்தில் ஒருபோதும் மலரப் போவதில்லை. இத் தேசிய இனங்கள் இன்னலோடு கூடிய வாழ்க்கை இருக்கும் வரை அதிலிருந்து மீள்வதற்கான பிரயத்தனங்களை விடப் போவதில்லை. அதனாற்தான் இந்திய உபகண்டத்தில் ஒரு பொழுதும் அமைதி நிலவப் போவதில்லை. தற்கால அமைதி நிலவினாலும் வர இருக்கின்ற அடுத்த பொருளாதார நெருக்கடி அந்த அமைதியைக் குலைக்கும். இந்த அமைதியின்மையினூடே இந்திய உபகண்டத்தில் நிரந்தரப் புரட்சிக்கான- சோஷலிசப் புரட்சிக்கான- வழிகள் பிறக்கும். இந்தியாவிலுள்ள தேசிய விடுதலை இயக்கங்களின் கட்சிகள் ஒருவர்க்க அடித்தளத்தைச் சாராத குட்டிமுதலாளித்துவ நடுத்தரவர்க்க தளமாக இருப்பதால் வர இருக்கும் பெரிய நெருக்கடிகளின் போது பொடிப்பொடியாவது திண்ணம். இந்தக் கசப்பான அனுபவங்களினூடு தான் புடமிட்டெடுக்கப்பட்ட பாட்டாளி வர்க்கக் கட்சி பரிணமிக்கும். பாட்டாளிவர்க்கத் தலைமை பெற்று சோஷலிசப் புரட்சி வரும் வரைக்கும் இந்தியாவில் அடக்குமுறையின் மூலம் அமைதியைக் கொண்டுவர முயற்சிப்பவர்கள், தேசிய இனங்களுக்கும் தொழிலாளவர்க்கத்திற்கும் துரோகம் செய்யும் வழியிலேயே செயற்படுவர். நிரந்தரப் புரட்சியே இந்தியாவிற்கு நித்திய அமைதியை அளிக்கும்.



# தோட்டத்தொழிலாளர்

சீ.எம்.யு வின் வேலை நிறுத்தமானது சிறிமாவோ பண்டாரநாயக்காவையும் அவரது அரசாங்கத்தையும் பாரிய நெருக்கடியுள் தள்ளியது. அந்த மட்டத்திற்கு தொழிற்சங்கங்கள் வீரியம் பெற்றிருந்தன 21 அம்சக்கோரிக்கைப் போராட்டமானது அவைகளை மேலும் ஐக்கியப்படுத்தி இருந்தன. அன்றைய தொழிற்சங்க ஐக்கியத்தின் குணும்சமானது வெறுமனே தொழிற்சங்க மட்டத்திற்கு அப்பாற்சென்று அரைவாசி வெகுஜனப் புரட்சிக்கட்சி மட்டத்திற்கு ஐக்கியப்பட்டதோடு போராட்ட வெறியோடும் இருந்தது. அதில் முக்கிய அம்சம் என்னவெனில் தோட்டத்தொழிலாளர்களும், நகரப்புறப் பாட்டாளிகளும் ஐக்கியப்பட்டிருந்தனர். அன்று உண்மையிலேயே எல்.எஸ்.எஸ்.பி ஒரு புட்சிகரக் கட்சியாக இருந்தது. அது ஆட்சியைக் கைப்பற்றுவதற்குரிய காலகட்டமும் வந்திருந்தது.

12.9.1964 பின்னேரம் கோல்பேஸ்திடலில் நடந்த தொழிற்சங்கக் கூட்டத்திலே தொண்டமானும் அசீசும் கலந்து கொண்டனர். அக்கூட்டத்திலே அவர்கள் கௌரவிக்கப்பட்டதை வர்ணிக்க முடியாது-கொழும்பிலுள்ள நகர்ப்புறத் தொழிலாளர்கள் அதைச்சொல்லிச் சொல்லியே மார்தட்டினார்கள். இக்கூட்டத்தைப் போல் ஒரு பாரிய தொழிலாளர்கள் பார்வையாளர்களாக இருந்த கூட்டத்தை இலங்கைச் சரித்திரம் கண்டிராது. அன்றைய கூட்டத்தில் கொல்வின்.ஆர்.டி.சில்வா இறுதி முடிவு மட்டும் போராடுவோம் எனச் சூளுரைத்தார். அக்கூட்டம் நடந்த பொழுது சிறிமாவோ.பண்டாரநாயக்காவை ஒரு பத்திரிகையாளர் பேட்டிகண்ட போது சிறிமாவின் உடலானது பயத்திலல் நடுங்கிக் கொண்டிருந்ததென்று எழுதியிருந்தார். அவர் தொழிலாளர்கள் கூட்டம் முடிவதற்கிடையிலேயே தொழிலாளர்கள் விவசாயிகள் புரட்சியில் குதித்து ஆட்சியைக் கைப்பற்றி விடுவார்களோ என்று திகில் கொண்டிருந்தார்.

இக்கூட்டம் சடுதியாக நடைபெறவில்லை. 1963 இன் பிற்பகுதியிலிருந்தே தொழிலாளர்கள் தங்கள் தலைவர்களையும் மீறி ஐக்கியப்பட்டுப் போராடத் தொடங்கிவிட்டனர். 1964 மேதின ஊர்வலமே தோட்டத்தொழிலாளர் உட்பட சகல இடதுசாரித் தொழிற்சங்கமும் ஐக்கியப்பட்டு நடாத்திய மேதினமாக இருந்தது. தொண்டமானும், அசீசும் கலந்து கொண்ட அந்த மேதின ஊர்வலத்திலேயே "தோசை வடே அப்பிட்ட எப்பா மீனுச்சி மசால வடே" என்பன போன்ற தமிழ் விரோத கோசங்களை ஆர்ப்பரித்தனர். அதுதான் தொழிலாளர்கள் மதபோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கையில் ஏற்கனவே இருந்த இனவாதத்தின் மிச்ச சொச்சங்களின் தாக்கத்தினால் கூறினார்கள் என்று விட்டு விடலாம். அன்றையகூட்டத்திலே என்.எம்.பெரேரா, கொல்வின்.ஆர்.டீ.சில்வா, பீற்றர்.கெனமனோடு தொண்டமானும், அசீசும் மேடையில் வீற்றிருந்த போது அவர்களை மேடையில் வைத்துக் கொண்டே இனவிரோதம் கக்கினர். அதன் பின்பும் கூட தொண்டமானும் அசீசும் 21 அம் சக்கோரிக்கைப் போராட்டத்திற்குச் செப்ரெம்பரிலே ஐக்கியப்பட்டனர் என்பதைச் சரித்திரம் மறக்காது.

கொல்வின்.ஆர்.டீ.சில்வா, கோல்பேஸ்திடலிலே விருப்புப் பேசிக்கொண்டிருந்த போது என்.எம்.பெரேரா அலரி மாளிகையின் வேலைக்காரர்கள் பாவிக்கும் கதவால் நுழைந்தார். சிறிமாவிற்குப் போன மூச்சுத் திரும்பிவிட்டது. கொழும்பிலே தீர்க்கமான கலந்துரையாடல் நடாத்தினால் சிலவேளை எதும் குழப்பம் வந்து விடும் என்று சொல்லி நுவரெலியா றெஸ்ற்கவுசில் தீர்க்கமான கலந்துரையாடல் நடாத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. நுவரெலியா வாடிவீட்டில் அன்று 17 வயதேயுடைய அனுரா.பண்டாரநாயக்காவோடு கிரிக்கட் விளையாடிவிட்டு என்.எம்.பெரேரா நிதி மந்திரிப் பதவியை ஏற்று வெளியே வந்தார். இப்பிரேரணையைப் பிலிப்.குணவர்த்தனவும், பீற்றர்.கெனமனும் ஏற்கனவே வரவேற்றார்கள். இங்கே நடந்த மற்றொரு மாற்றம் தான் தோட்டத்தொழிலாளர்களது போராட்டங்களைச் சாந்தப் படுத்த வென்று சொல்லி அன்றைய கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளரும், திரு.பண்டாரநாயக்கா அரசாங்கத்தில் சோவியத்யூனியனுக்கு விருந்தாளியாகச் சென்றவருமான அசீசுக்கு செனட்டர் பதவியும் கிடைத்தது.

என்.எம்.பெரேரா சிறிமாவின் கொய்யகத்தில் தூங்கியதோடு எல்.எஸ்.எஸ்.பி திவலை திவலையானது அதோடு மட்டும் அவ்விபரீதம் நின்றுவிடவில்லை இலங்கை-இந்தியக் காங்கிரஸ் தொண்டமான் கன்னையாகவும் அசீஸ் கன்னையாகவும் பிளந்தது. சீ.ஐ.ஏ சார்புப் பிற்போக்குத் தொழிற்சங்கக் கூட்டுக்குழுவான ஐ.சி.எவ்.ரி.யு ஏராளமானகாசை இறைத்தது தொண்டமானை விலைக்கு வேண்டியது. அது தொண்டமான் கன்னைக்கு சீ.டபிள்யு.சீ என்ற பெயரையும் வழங்கித் தொண்டமானைச் சர்வதேச தொழிற்சங்க சம்மேளனங்களுக்கு வரவழைத்து பெரிய பிரபலிக்கத்தை அளித்தது. தொண்டமானது சக்தி சர்வதேச அமைப்பான ஐ.சி.எவ்.ரி.யு வின் முண்டென்பதைத் தமிழ்மக்கள் கருத்திற் கொள்ள வேண்டும்.



டபிள்யு.எவ்.ரி.யு சேர்ந்திருந்தவாதத் தொழிற்சங்கத்தலைமை அசீசுக்கு முண்டு கொடுத்து டி.டபிள்யு.சி யைத் தோற்றுவித்தது. தோட்டத் தொழிலாளர்கள் தொழிற்சங்க ஐக்கியம் பிரிவதை ஜீரணிக்கவில்லை தோட்டங்கள் எல்லாவற்றிலும் சரீர ரீதியான முட்டி மோதல்கள் நடந்தன அசீஸ் கன்னைக்கும் தொண்டமான் கன்னைக்குமிடையே வெட்டும், கொத்தும் கை,கால் இழந்தவர்கள் தொகை எண்ண முடியாது. இருந்த போதும் சிலோன் இந்தியக்காங்கிரஸ் சி.டபிள்யு.சி, டி.டபிள்யு.சி எனப் பிளவுபட்டது. என்.எம்.பெரேராவின் துரோகம் அன்றைய எல்.எஸ்.எஸ்.பி சார்பான தொண்டமானை அதீதவலது சாரிக் கன்னைக்குத் தள்ளியதோடு அன்றைய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பான அசீசை எஸ்.எல்.எவ்.பி க்குத் தள்ளியது.

மேலும் 1964 இல் இடதுசாரி ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் செனட்டராக அசீஸ் இருந்த போது என்.எம்பெரேராவும்,பிலிப்.குணவர்த்தனவும் தங்களது நீண்டகளவான தோட்டத் தொழிலாளரை இந்தியா அனுப்பும் சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்தை நிறைவேற்றினர். இது அசீசின் தலைமைக்குப் பெரிய விழுக்காட்டைக் கொண்டு வரவே சி.டபிள்யு.சி பாரிய மட்டத்தில் வளர்ந்தது. 80,000 இற்கு மேலாகத் தோட்டத் தொழிலாளர்களை வைத்திருந்த சமசமாயத் தொழிற்சங்கம் கருவிக் கழுதைவால் போலானது.

1964 இன் பிற்பகுதியில் செல்வநாயகம், அமிர்தலிங்கம் உட்பட லேக்கவுசைத் தேசிய மயமாக்கும் பிரேரணைக்கு மாறாக வாக்களித்தல் என்ற பெயரில் யூ.என்.பி யாலும், ஏகாதிபத்திய சதிகாரர்களினாலும் விலைக்கு வாங்கப்பட்டு இடதுசாரி ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் தோற்கடிக்கப்பட்டது. லண்டன் சென்ற என்.எம்.பெரேரா இடதுசாரி ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஒரு வாக்கினால் தோற்கடிக்கப் போகுதென்றறிந்தும் விசேட விமானத்தில் வராமல் தானும் சதியின்பங்காளரானார்.

1965 இல் யூ.என்.பி தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் தேசிய அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றியது. திரு.திருச்செல்வம் கியூ.சி மந்திரியானார். சி.ஐ.ஏ இனதும் ஐ.சி.எவ்.ரி.யு வினதும் பணிப்பின் பேரில் திரு.தொண்டமானுக்கு செனட்டர்பதவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழங்கப்பட்டது. திரு.செல்வநாயகமும் அவரது தமிழரசுக்கட்சியும் தாம் திரு ஜீ.ஜீ.பொன்னம்பலம் தோட்டத்தொழிலாளரது வாக்குரிமையைப் பறித்ததற்காகக் காங்கிரசிலிருந்து பிரிந்தோமென்று ஜம்பமடித்தார்கள். 1965 தேர்தல் முடிந்தது தான் தாமதம் எவ்வித நிபந்தனையுமின்றி ஐக்கியப்பட்டுத் தேசிய அரசாங்கம் அமைத்தனர். எந்த யூ.என்.பி தோட்டத்தொழிலாளரது பிரஜா உரிமையைப் பறிப்பதோ அந்த யூ.என்.பி யோடு தோட்டத்தொழிலாளரது பிரஜா உரிமை பற்றி எந்தவொரு நிபந்தனையும் விதிக்காது ஐக்கியப்பட்டுத் தேசிய அரசாங்கம் அமைத்தனர். 1965 தொடக்கம் 1970 வரை இருந்த ஆட்சிக் காலத்தில் செல்வநாயகமோ, அமிர்தலிங்கமோ மறந்தாவது பிரஜா உரிமைப் பிரச்சினை பற்றியோ அன்றேல் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தைப் பற்றியோ பாராளுமன்றத்தில் ஒரு வார்த்தையாவது பேசியிருக்க மாட்டார்கள்.

1965,66 களிலேயே உலக பொருளாதாரத்தில் தேக்கநிலை ஆரம்பமாகத் தொடங்கி விட்டது. 1965, 66 களில் மேற்கு நாடுகளில் மெல்ல மெல்ல வளர்ச்சி கண்ட வேலைநிறுத்தப் போராட்டங்கள் 1967 இல் பிற்பகுதியில் பாய்ச்சலை அடைந்தன. 1968 மே, யூன்களில் பிரான்சில் பொதுவேலைநிறுத்தமானது டீ கோல் நாட்டைவிட்டு ஓடுமளவிற்கு வெடித்தது. 1969 இத்தாலியில் வர்க்கப் போராட்டம் உக்கிரமடைந்ததோடு அமெரிக்காவிலே நீக்ரோ மக்களின் போராட்டமும் உச்சக்கட்டத்தை அடைந்தது. சராசரி இந்த ஆண்டுகளில் உலகளாவ 44 மில்லியன் தொழிலாளர் மட்டில் பங்கு கொண்டனர். இந்நாட்களில் தோட்டத்தொழிலாளர் கிழமைக்கொரு வேலைநிறுத்தத்தை நடாத்திக் கொண்டிருந்தனர். தந்தை செல்வநாயகமும் அமிர்தலிங்கமும் தொண்டமானும் யூ.என்.பி யோடு சேர்ந்து இவ்வேலைநிறுத்தப் போராட்டங்களை நசுக்கிக் கொண்டிருந்தனர், சுதந்திரன் பத்திரிகை அரசாங்கத்துக்கு ஊதுகுழலாகச் செயற்பட்டது. இந்தநாட்களிலே தான் தோட்டங்களில் யாழ்ப்பாண விரோதம் முளைவிடத்தொடங்கியது. வேலை நிறுத்தங்களிலே வேலை நீக்கப்பட்ட தொழிலாளர்களது பிரச்சனையைத் தீர்ப்பதற்கு தொண்டமான் புதிய கண்டு பிடிப்பை அப்போது கண்டு பிடித்தார். அதுதான் இ.தொ.காவிற்கு மாதாந்தம் தொழிலாளர் கொடுக்கும் ஒரு ரூபாவோ, இரண்டு ரூபாவோ



அங்கத்துவ நிதி லட்சக்கணக்கில் சேர்ந்திருந்தன. அந்த நிதியிலே தோட்டங்களை விலைக்கு வாங்கினால் வேலை நீக்கம் செய்யப்படும் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கலாம் என்று சொல்லி தோட்டங்களும் வாங்கப்பட்டன. இத்தோட்டங்கள் எல்லாம் தொண்டமானது பெயரிலேயே வாங்கப்பட்டன. தொண்டமானுக்குச் சொந்தமான "றம்பொட" தோட்டத்திலும், தந்தை செல்வநாயகத்திற்குச் சொந்தமான "பெட்டியாகல" தோட்டத்திலும் தொழிலாளர்களது வாழ்க்கை வசதிகள் மிகவும் மோசமானவையாகும். இரு தோட்டங்களிலுமே நீர்வரும் குழாய்கள் கறல் பிடித்து உடைந்து போனதால் தொழிலாளர்கள் மூங்கிலைப் பிளந்து அதனூடு நீர் பாயவைத்துக் குடங்களிலே மொண்டு கொள்ளும் காட்சியைக் காணத் தவற மாட்டார்.

தந்தை. செல்வநாயகத்தின் பெட்டியாகலைத் தோட்டத்திற் கூட தோட்டத்தொழிலாளர்கள் காலம் காலமாகப் போராடும் மாதச்சம்பளம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. தோட்டத்தொழிலாளர்களுக்கு பெட்டியாகலைத் தோட்டத்தின் கணக்குப் புத்தகம் திறந்து காட்டப்பட்டு அதில் வரும் லாபம் இன்ன விதம் என்று ஒரு நாளும் காட்டியது கிடையாது. பெட்டியாகலைத் தோட்டத்திற்குத் தந்தை. செல்வநாயகம் எழுந்தருளிய போது அங்குள்ள தோட்டத் தமிழர்கள் தமிழர்களாகத் தெரிந்தார்களோ நாமறியோம். இன்றும் யாராவது தோட்டத்தொழிலாளர்களின் நல்வாழ்வில் கரிசனையிருந்தால் பெட்டியாகலைத் தோட்டத்திற்குச் சென்று அவர்களின்கடந்த கால வாழ்க்கை நிலைமைகளையும் போராட்ட அனுபவங்களையும் விசாரித்து பார்த்தால் பல உண்மைகளை புரிந்து கொள்வர்.

அடுத்து எப்போது தோட்டத்தொழிலாளர்கள் முதன் முதலாகப் பலாத்காரமாக இந்தியாவிற்கு ஏற்றிச் செல்லப்பட்டார்கள் என்றால் தந்தை செல்வநாயகமும், அமிர்தலிங்கமும் யூ.என்.பி. யோடு ஒட்டியிருந்த நாட்களிலே தான் என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும். தமிழ் தமிழ் என்று கொக்கரிக்கும் கோமான்கள் இன்றுவரை ஒரு நாளாவது தோட்டத்தொழிலாளர் மத்தியில் ஒரு பிரசித்தக் கூட்டத்தை நடாத்தவில்லை என்பது ஈண்டு குறிப்பிட வேண்டிய விடயமாகும். தோட்டப் பாடசாலைகளை அரசாங்கப் பாடசாலையாக்க வேண்டுமென்ற எண்ணம் கூட இவர்களுக்குத் தோன்றியது கிடையாது. இவர்கள் தங்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

—ளது அரசியல் வாழ்க்கையில் காற்று மழைக்கு ஒதுங்கவென்றுவது தோட்ட லயன்களிலே போனது கிடையாது. தோட்டத் தொழிலாளர்களது வாழ்க்கையானது சிங்களம் அரசகரும மொழியாக இருந்தாலென்ன தமிழ் அரசகரும மொழியாக இருந்தாலென்ன தரப்படுத்தல் அமுலிலிருந்தாலென்ன அமுலில்லாவிட்டாலென்ன அவர்களது வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. அவர்களது பிரச்சினை சமூகப்பிரச்சினையின் அடுத்த கோடியிலே இருந்தது. அவர்களது பிள்ளைக்குக் கையெழுத்துப் போடத் தெரியுமா, தெரியாதா என்ற பிரச்சினை போனகிழமை தோட்டத்துரை கொடுத்த அரிசியில் இன்னும் இருக்கிறதா என்ற பிரச்சினையே அவர்களுக்கு இன்றியமையாததாக இருந்தன. கங்காணியினது மரியாதை கெடுத்தலையும் ஏ உதைப் பேச்சுக்களையும் கேட்டுப் பின்னேரம் வரை ஆத்திரமடையாது பொறுமையாக இருக்கும் நித்திய வரமே அவர்களுக்குத் தேவைப்பட்டது. தமிழ்ச் சிற்பிகளின் சிங்களம், தமிழ் ஆயுதங்கள் தோட்டத் தமிழர்களிடம் கூர்மழுங்கியதன் தாற்பரியம் இதுதான்.

எந்தப் பிலிப். குணவர்த்தன தோட்டத்தொழிலாளர்களை இலங்கையிலிருந்து கலைந்தெறியப் பாடுபட்டாரோ அந்தப் பிலிப். குணவர்த்தனவோடு தந்தை செல்வநாயகம் அமிர்தலிங்கம், தொண்டமான் கைகோர்த்துச் செயற்பட்டனர். பிலிப். குணவர்த்தன 1964 ல் சிறிமாவோடு இருந்தபோது நிறைவேற்றிய சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்தை 1960—1970 யு.என்.பி அரசாங்கத்தில் நடைமுறைப்படுத்தி ஆயிரக்கணக்கானோர் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டனர். 1965—1970 வரை ஒன்றைவிட்டு ஒரு நாளைக்கு தலைமன்னாருக்குச் செல்லும் தொடர்வண்டியின் இணைப்பு, தொடர்வண்டி மலைநாட்டு தரிப்பு ஸ்தானங்களில் வரும்போது நாடு கடத்தப்படும் தொழிலாளர்களை வழியனுப்பும் காட்சிகள் செத்தவீட்டுக்காட்சிகளாகவே தென்படும். 1965—1970 வரை செல்வநாயகங்களும், அமிர்தலிங்கங்களும் தோட்டத் தொழிலாளர்களுக்குச் செய்த துரோகங்களை இன்றைய இளைய தலைமுறையினர் அறிந்திராமல் விடக்கூடும். 1965—1970 வரை செல்வநாயகங்களும், அமிர்தலிங்கங்களும் நடாத்திய பாராளுமன்றப் பேச்சுக்களை இன்னொரு தடவை மீளப் படித்துப் பாருங்கள். இவர்கள் தோட்டத் தொழிலாளர்களது போராட்டங்களைப் பாதுகாக்கச் சின்ன விரலைத் தன்னும் உயர்த்தினார்களோ என்பதைக் கண்டு கொள்வார்கள். எழுபதோடு பிலிப். குணவர்த்தனவின் அரசியல் வாழ்க்கை முற்றுப் பெற்றது.



# செய்திகள்

## சங்கானை மக்கள் வங்கியில் ரூபா 90 லட்சம் பெறுமதியான நகைகள் கொள்ளை

90 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் அவை வைக்கப்பட்ட பெரிய கனரக இரும்புப்பெட்டியையும் 25 பேர் கொண்ட வாலிபர்கள் கோஷ்டியொன்று கடந்த 13.02.84 திங்கள் இரவு அபகரித்துச் சென்றனர். சாதாரண உடையிலும் சீருடையிலும் வந்த மேற்படி வாலிபர்கள் வங்கியின் பின்பக்கக்கதவுப்பக்கமாக உள்ளே புகுந்து நகைகள் வைக்கப்பட்டிருந்த கனரக இரும்புப்பெட்டியை உடைக்க முயன்று தோல்வியில் முடியவே, தங்களுடன் கொண்டுவந்திருந்த "வெல்டிங்" மற்றும் எரிவாயுவைப் பயன்படுத்தி உட்கதவுகளை வெட்டித்திறந்து கனரக இரும்புப் பெட்டியையும் கொண்டு சென்றுவிட்டனர். இவ் இரும்புப்பெட்டியைத் தூக்குவதற்கு 800 யார் தூரத்திலுள்ள மின் நிலையத்தில் வேலை செய்த சுமார் பதினைந்து இரவு பாதுகாப்பு ஊழியர்களை துப்பாக்கிமுனையில் பயமுறுத்தி வங்கிக் கட்டிடத்திற்கு அழைத்துவந்து வங்கி அறை ஒன்றினுள் அடைத்துவைத்து இரும்புப்பெட்டியைத் தகர்த்தவுடன் மேற்படி ஊழியர்களுடன், இரும்புப் பெட்டியை லொறிக்குள் ஏற்றிப் பின்னர் ஊழியர்களை வங்கியின் அறைக்குள் பின்னரும் அடைத்தனர். செவ்வாய் அதிகாலை அயலவர்களின் உதவியினால் மீட்கப்பட்ட ஊழியர்கள் இரகசிய பொலிசாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டபோது மேற்படி வாலிபர்களை தங்களால் அடையாளம் காட்ட முடியாத நிலையில் இருப்பதாக கூறியுள்ளனர்.

மேற்படி கனரக இரும்புப் பெட்டி 19.02.84 ஞாயிறு அதிகாலை, காலியான நிலையில் வல்லைவெளிச் சந்தியிலிருந்து பொலிசாரினால் மீட்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து வடக்கு, கிழக்கில் இருந்த பல மக்கள் வங்கிக்கிளைகள் ஒழிக்கப்பட்டுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வங்காலையில் மூன்று யுவதிகள் கைது:-

"மன்னார் தள்ளையடியிலுள்ள ஆயுதப்படையினரால் வங்காலையைச் சேர்ந்த மூன்று யுவதிகள் எதுவித காரணமின்றி விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டிருப்பதாக அறிகின்றேன். இது விடயத்தில் உடன் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்." என்று எதிர்கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா இராணுவ தளபதி பிரிகேடியர் திஸ்ஸ. வீரதுங்காவுடன் தொடர்பு கொண்டு கேட்டுள்ளார். வங்காலை கிராமத்தைச் சேர்ந்த மூன்று யுவதிகள் ஆயுதப்படையினரால் எவ்வித காரணமுமின்றி அழைத்துச் செல்லப்பட்டிருப்பதாக வங்காலை கிராமோதய சபைத் தலைவர் எதிர்க்கட்சித் தலைவரிடம் முறையிட்டிருந்தார்.

பல்கலைக்கழகமாணவர் ஆர்ப்பாட்ட ஊர்வலம்:-

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட முதலாம் வருட மாணவரான வவுனியாவைச் சேர்ந்த எஸ். லவன் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதை ஆட்சேபிக்கு முகமாக மருத்துவ பீட முதலாம் வருடமாணவர்கள் சுமார் 250 பேர் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடாத்தினர். ஏனைய பீட மாணவர்கள் சுமார் 2500 பேர் தமது விரிவுரைகளை பகிஷ்கரித்து இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்திற்கு ஆதரவளித்தனர். லவன் சுன்னாகத்தில் வைத்து மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது 16.02.84 வியாழக்கிழமை காலை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலம் கொக்குவில் கோணாவில் வைரவர் கோயிலைப் பார்த்தபடி இருக்கும் மருத்துவ பீட வாசல் வழியாகப் புறப்பட்டு ஆடியபாதவீதி, பலாலிவீதிவழியாக ஒன்றரை மைல் நீள ஆர்ப்பாட்டத்தை அவர்கள் நடாத்தினர்.

6 இடம்பெயர்ந்த பட்டதாரி மாணவர்கள் கைது:-

ஆறு இடம்பெயர்ந்த பட்டதாரி மாணவர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பேராதனை



பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள், பெற்றோருக்கோ பல்கலைக்கழக துணைவேந்தருக்கோ முன்னறிவித்தல் கொடுக்காமல் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து இடம்பெயர்ந்த தமிழ் பல்கலைக்கழக மாணவ ஒன்றியம் அகில இலங்கை தமிழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளது. மாங்குளத்தைச் சேர்ந்த எஸ். நாகேஸ்வரன், ஞான பண்டிதன், முல்லைத்தீவைச் சேர்ந்த ஜெ. தேவலிங்கம், ஒட்டுசுட்டானைச் சேர்ந்த ஆர். தங்கேஸ்வரன், கல்முனையைச் சேர்ந்த வேல்மோகன், மட்டக்களப்பைச் சேர்ந்த பகீரதன் ஆகியோரே கைதுசெய்யப்பட்ட மாணவர்களாகும்.

இருபத்திநான்கு வைத்தியசாலைகள் மூடப்பட்டன:-

இலங்கையில் 6750 பேருக்கு ஒரு டாக்டரும், 335 பேருக்கு ஒரு படுக்கை வீதம் இருக்கையில், கடந்த ஜூலைக் கலவரத்தின் பின்னர் இருபத்திநான்கு வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் ஏற்கனவே நோய், பிணியினால் அவதியுறும் மக்கள் ஆஸ்பத்திரியே தஞ்சம் என இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆஸ்பத்திரியிலும் மருந்துகளோ துப்புரவோ இல்லாமையால் ஜூலைக்கலவர அகதிகள் முகாம்கள், சென்றமாத வெள்ள அகதிகள் முகாம்கள் போன்றே அரசினர் வைத்தியசாலைகளும் காட்சியளிக்கின்றன. மேலும் யாழ் அரசினர் ஆஸ்பத்திரியில் மருந்துவகைகள் கிடையாமையால் நிர்வாகத்தினர் ஒருசில மருந்துவகைகளை தனியாரிடம் வாங்கி கொடுத்து மற்றவைகளை மருந்துகளை நோயாளிகளை வாங்கச் சொல்கின்றனர்.

கைதான பாடசாலை அதிபரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய ஆட்கொணர்வு மனு:-

பொலிசாரினால் கைதான நிலாவெளி தமிழ் மகா வித்தியாலயஅதிபர் செல்வநாயகம் கனகசபையை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யக்கோரி மேன்முறையீட்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுவொன்றை அவரது தகப்பனார் தாக்கல் செய்துள்ளார். இவர் தனது மனுவில் பொலிஸ் மா அதிபர், திருகோணமலை உதவி பொலிஸ் அதிபர், உப்புவெளி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரை பிரதிவாதியாகக் குறிப்பிட்டுள்ளார்.

11.12.85 அன்று கைதான கனகசபை இதுவரை எங்கே இருக்கின்றார் எனத் தெரியவில்லை என்றும் எவ்வித குற்றச்சாட்டும் இன்றி கைதான அவரை நீதிமன்றத்தில் ஆஜராக்க உத்தரவிட வேண்டுமெனவும் குறிப்பிட்ட மனுவில் மேற்படி அதிபரின் மோதிக தனைகளாக ஐ.தே.க ஆதரவாளரான கனகசபை 1977 ஆண்டு பொதுத்தேர்தலிலும், 1982ல் ஜனாதிபதித் தேர்தலிலும், 1985ல் சர்வஜனவாக்கெடுப்பிலும் ஐ.தே.க ஆதரித்தே பிரச்சாரம் செய்தார் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஐ.தே.கட்சியின் ஆதரவாளர்களுக்கே இக்கதியெனில்? இவருடைய தகப்பனரும் மற்றையோரும் ஐ.தே.கட்சியை ஆதரித்ததே மேற்படி அதிபர் செய்த தவறு என்பதை இனியாகிலும் புரிந்து கொள்வார்களாக.

மாணவருடன் இராணுவத்தினர் விளையாட்டு:-

மாணவருடன் (கல்தடா) இராணுவத்தினர் கிரிக்கெட் விளையாடுகின்றனர் என அரச வானொலிகள் செய்திவெளியிட்டுள்ளன. மாணவர் பாதயாத்திரையில் கண்ணீர் குண்டு வீச்சு, இன்பம்-செல்வத்தை கழுத்தை நெரித்துக்கொலை பல்கலைக்கழக மாணவருடன் இராணுவ மோதல் போன்ற விளையாட்டுக்களை அவர்கள் தவறவிட்டுவிட்டனர்.

முப்பதினாயிரம் தோட்டத்தொழிலாளர் அடையாள வேலைநிறுத்தம்:-

டயகம வெஸ்ட் தோட்டத்தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளி ஒருவர் மேற் பார்வையாளர்களால் தாக்கப்பட்டதை ஆட்சேபித்து இது தொடர்பாக விசாரணை நடாத்தவேண்டுமென்று கோரி கடந்த இரண்டு



வாரங்களுக்கு மேலாக 2500 தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்துவந்தது பாராமுகமாக இருந்தமையால் இவர்களின் கோரிக்கைக்கு ஆதரவு திரட்டுமுகமாக இலங்கைத் தோட்டத்தொழிலாளர் செங்கொடிச் சங்கத்தின் உறுப்பினர்களும், இலங்கைத் தேசிய தோட்டத்தொழிலாளர் சங்க உறுப்பினர்களும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் உறுப்பினர்களுமாக 30,000 தோட்டத்தொழிலாளர்கள் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்தில் 22.2.84ல் குதிக்கின்றனர். இக் கோரிக்கையில் தீர்வு இன்றேல் மேலும் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் குதிப்பார்கள் என செங்கொடிச் சங்கத்தின் செயலாளர் ஓ.ஏ.இராமையா குறிப்பிட்டுள்ளார்.

மல்லாகம் நீதிமன்றத்தில் இருந்து இரண்டு சந்தேகநபர்கள் கடத்தப்பட்டனர்:-

"பொலிஸ்" என முன்பக்கத்தில் எழுதப்பட்ட ஜீப் வண்டியில் வந்த ஐந்து வாலிபர்கள், மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபின்னர் திருப்பவும் சிறைக்கு செல்வதற்காக சிறைவாகனத்தை எதிர்பார்த்து நிற்கையில் காவலாளர்களை தாக்கிவிட்டு செல்வராசா கிருஷ்ணபிள்ளை, பத்மநாதன் தர்மகாந்தன் ஆகியோரை வாலிபர்கள் கடத்திக்கொண்டு சென்றுவிட்டனர்.

குட்டிமணி, தங்கத்துரையினரின் படம் போட்ட 1984ம் ஆண்டுக்கான கலண்டர்கள் விநியோகம்:-

தோழர்கள் தங்கத்துரை, குட்டிமணி மற்றும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் வெளிநாட்டு ஆர்ப்பாட்டஊர்வலங்கள், கூட்டங்கள் போன்றவற்றின் படங்களைக் கொண்ட 1984ம் ஆண்டுக்கான வண்ணக் கலண்டர்கள் தமிழீழத்தில் விநியோகிக்கப்பட்டுள்ளன. மேற்படி கலண்டர்களின் சில பகுதியும், தமிழீழ விடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலை இயக்கத்தின் ஆங்கில, தமிழ் புத்தகங்களும் சுவரொட்டிகளும் வல்வெட்டித்துறை பகுதியிலுள்ள பாழடைந்த வீட்டில் இருந்து பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. சிங்களத்தில் ஒட்டப்பட்ட சுவரொட்டியின் மேல் இராணுவத்தினர் மைபூசி அழித்துள்ளனர்.

இலங்கைக் கம்யூனிஸ்கட்சியின் தேசிய மாநாடு:-

'தமிழர் பிரச்சனைக்கு தற்காலிக தீர்வாவது ஏற்படாக வேண்டும். இல்லையேல் இந்தியாவை காரணம் காட்டி அமெரிக்கா நுழையலாம்" என இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பன்னிரண்டாவது தேசிய மாநாட்டை ஆரம்பித்துப் பேசிய தலைவர் திரு. பீட்டர் கெனமன் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் "இந்நாட்டில் அரசியல் கட்சிகளை ஒழித்து இராணுவ ஆட்சியை அமுல் நடாத்த முயற்சிகள் நடைபெறுகின்றனவா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. வடக்கையும் கிழக்கையும் பார்க்கும் போது அந்த நிலைமை தோன்றாது என்று சொல்வதற்கில்லை. அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் வைன் பேர்கரின் திடீர் விஜயத்தையும், அவர் எமது நாட்டின் பாதுகாப்பு தொடர்பாக தெரிவித்த கருத்துக்களையும் நினைத்துப் பார்க்கும் போது நாம் எதிர்நோக்கவுள்ள நெருக்கடிகள் தீர்க்க தரிசனமாகத் தெரிகின்றன."

"சிலி, சைப்பிரஸ், லெபனான் போன்ற தேசங்களில் ஏற்பட்ட நெருக்கடிகளை நாம் இங்கு தோன்ற அனுமதிப்பதா? மற்றவர்களைப்பற்றி எமக்கு அக்கறையில்லை. கம்யூனிஸ்டுகளாகிய நாம் எமது பணியை மேற்கொள்வோம். எமது இலட்சியத்தை நிறைவேற்றுவோம். இன்றைய நிலையில் எமது வர்க்கப்போராட்டத்தை தொடர முடியாத நிலை தோன்றியுள்ளது. தமிழர் பிரச்சனையை இம் முதலாளித்துவ அமைப்பில் தீர்க்க முடியாது என்பது உறுதி. சர்வகட்சி மகாநாட்டில் சமரசத் தீர்வை ஏற்படுத்த சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றோம். இன்றைய அரசாங்கம் பதவிக்கு வந்தபின்னர் அடிப்படை உரிமைகளும் படிப்படியாக பறிக்கப்பட்டன" எனக்கூறினார்.



அமெரிக்கப் போர்க்கப்பல்கள் கொழும்பு வருகை:-

ஹெலிக்கொப்டர்களையும், நவீன முறையில் கையாளக்கூடிய ஆயுதங்களையும் கொண்ட இரு அமெரிக்க போர்க்கப்பல்கள் 17.2.84 வெள்ளிக்கிழமை கொழும்புத்துறைமுகத்தை வந்தடைந்தது. "சோயில்ட்" என்னும் கப்பல் 250 கடற்படையாளர்களையும், "நவுசோடா" என்னும் கப்பல் 154 கடற்படையாளர்களையும் கொண்டுள்ளது. தற்போது அமெரிக்க போர்க்கப்பல்கள் இலங்கை வருகை சர்வசாதாரணமாகிவிட்டது.

சிறிமாவோ - மைத்திரி குழுவினர் மீண்டும் இணைவு:

கடந்த சில காலமாக நோய்வாய்ப்பட்டு யூகோஸ்லாவியாவில் சிகிச்சை பெற்று நாடு திரும்பிய திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, ஏற்கனவே பிரிந்து சென்ற மைத்திரி குழுவினருடன் இணைவதற்கு இரு சாராரும் ஒத்துக்கொண்டுள்ளனர். சிறிமா அணியில் சிலர் மைத்திரி குழுவினருடன் நிபந்தனையின்றி இணைய வேண்டுமென்றும் மற்றும் சிலர் சில நிபந்தனையின் பேரிலேயே இணைத்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறி நிற்கின்றனர்.

ஜூலைக் கலவரத்தை அடுத்து தமிழகம் வந்த அகதிகளில் பலர் திரும்பவும் இலங்கை திரும்புகின்றனர்:-


கடந்த ஜூலைக்கலவரத்தினால் பாதிக்கப்பட்டு இந்தியா வந்த 35 ஆயிரத்து 896 பேரில், 14 ஆயிரத்து 334 பேர் மீண்டும் இந்தியாவில் இருந்து இலங்கை திரும்பிவிட்டனர் என தமிழக ஆளுனர் திரு. எஸ். எல். குரானா தமிழக சட்டமன்ற மேலவைக் கூட்டுக் கூட்டத்தில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் தற்போது தங்கியுள்ள 21 ஆயிரத்து 562 பேரில், ஒரு பகுதியினர் பல்வேறு அகதிகள் முகாமில் தங்கியிருப்பவர்களாகவும், மறுபகுதியினர் மறுவாழ்வு அளிக்கப்பட்டவர்களாகவும் உள்ளனர் எனவும் குறிப்பிட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ISLAM
## THE IMMIDIATE CHALLENGE FOR IMPERIALISM



KHOMEINI

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்